# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 7 October 2011

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்


சாவித்ரி ........ 2

ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள் ........ 4

லைப் டிவைன் ........ 6

மஹாபாரதத்தில் சொல்லாதது எது? ........ 16

அன்பர் கடிதம் ........ 23

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 27

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 30

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 31

சிந்தனை மணிகள் ........ 37

இம்மாதச் செய்தி ........ 41

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 42

லைப் டிவைன் - கருத்து ........ 49

சரண்டர் சத்யன் ........ 51

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ........ 59


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**சாவித்திரி மற்றும் லைப் டிவைனை எழுதியதைப் போல ஒரு அற்புதம் வேறு ஒன்றில்லை.**

**வாழ்க்கையிலிருந்து அன்னைக்கு உடனடியாக மாறுபவருக்குப் பலன்களும் உடனடியாக வரும்.**

**ஆண்டவனை அழைக்கும் மந்திரமும் மனிதர்களை உபசரிக்க வைக்க முடியாது.**

## P.130 Life heard the call and left her native light

### குரலைக் கேட்ட வாழ்வு உரிமையின் உறவை விட்டகன்றது

☆ அற்புதலோகத்தினின்று அபரிமிதம் வழிந்தோடியது
☆ பரந்த அழியுமிடத்தில் இறுகிய நூல் முடிச்சு,
☆ உயரே பறக்கும் உன்னத தேவதை இங்கும் தன்னைப் பொழிந்தது
☆ அவளற்புதம், ஆனந்தம், இனிமை ஊற்றெடுத்தது,
☆ அழகிய புதுலோகத்தை ஆனந்த மகிழ்வால் நிரப்ப முயன்றது.
☆ மனித வாழ்வை தெய்வக் கருணை அணைத்து நிரப்பும்
☆ அழியும் ரூபத்துள் அழியா தன்னிறைவை நிரப்பும் அவள் மனநிலை,
☆ ஜடத்தின் கர்ப்பத்துள் அழிவற்ற அவள் கனல் நுழைந்தது;
☆ சொரணையற்ற பரப்பில் எண்ணம் எழுந்து நம்பிக்கையாயிற்று,
☆ நாடி நரம்பும் நமது தசையும் அழகின் கவர்ச்சிக்குட்பட்டன,
☆ உணர்ச்சியற்ற உலகின் உடலில் திணிக்கப்பட்ட ஆனந்தம்
☆ ஜீவனுள்ள உலகம் மரத்திலும், மலரிலும், மூலிகையிலும் பெற்றது ஜீவனுள்ளது.
☆ அகன்ற பூமாதேவியின் மார்பகம் வானத்தை நோக்கி புன்னகையால் மலர்ந்து



☆ நீலவானம் நீலக்கடலில் நித்திய மகிழ்வில் கரைந்தது,
☆ அழகின் மார்பில் தவழும் பெருமையின் வேகம்;
☆ எட்டாத ஆழத்தின் உயிருள்ள ஜீவனின் உணர்ச்சி,
☆ துணிந்த மனிதன் உலகின் ஆத்மாவை எண்ணத்தால் சந்தித்தான்.
☆ விலங்கின் அழகில் விரைவாக விளங்கும் வாழ்வின் பெருமை,
☆ மாயமூச்சு மந்திரமாய் சூழ்ந்து வலம் வந்தது,
☆ சிறைப்பட்ட இதயம் பெறும் பெறற்கரிய பரிசுகள்.
☆ இருண்ட இனம் புரியாத தெய்வம் எழுப்பிய கேள்விகள்
☆ இருளை ஆடையாகப் போர்த்தும் இரகஸ்ய உறுதி,
☆ உடல் பெற்ற அவதியை ஆத்மாவுக்குப் பரிசாக அளிக்கிறது.
☆ மரண வேதனையை புதிரான முகமூடியாகத் தருகிறது
☆ மெதுவாக நகரும் வேதனையான வருஷம் உவந்து பெற்ற உணர்வு
☆ ஆச்சரியமான வழிப்போக்கன் விரைவிலும் ஏற்கும் ஓய்வு,
☆ நினைவுபடுத்த முடியாத இனிமையான இன்ப நிலை,
☆ ஜடமான இருண்ட சட்டம் பணிவுக்குரியது
☆ அதுவே உணர்வற்ற அஸ்திவாரம் உலகம் பெற்றது
☆ அழகு ஏற்கும் குருட்டு எல்லைகள்
☆ வருத்தமும் சந்தோஷமும் பகிர்ந்து வாழும் நட்பு.
☆ பயங்கர மௌனம் பணியாகக் கவர்ந்தது:
☆ சூட்சும வலிமை அடியோடு அழிந்தது
☆ குழந்தை தேவதையின் குதூகலம் கொல்லப்பட்டது,
☆ பெருமையெல்லாம் சிறுமையாயின

❋❋❋

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

51. காலத்தைக் கடந்த சத்தியஜீவியம்: படைப்பிற்கும், இறைவனுக்கும் இடையே-யுள்ள ஒற்றுமையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதும் அதே சமயத்தில் காலத்தைத் தாண்டி இருக்கின்ற சத்தியஜீவியத்தின் ஒரு பகுதி.

52. காலத்திற்-குட்பட்ட சத்தியஜீவியம்: படைப்பிலுள்ள வேற்றுமைகளை வெளிப்-படுத்தி அதே சமயத்தில் பின்னிருக்கிற அடிப்படை ஒற்றுமையையும் இழக்காமல் இருக்கின்ற சத்தியஜீவியத்தினுடைய இரண்டாம் பகுதி.

53. பழக்கம்: சத்தியஜீவியத்தின் வளைந்து கொடுக்கும் தன்மைக்கு எதிராக உடம்பில் நிலை பெற்றிருப்பதும், திரும்பத்திரும்ப நடக்கின்றது-மான செயல்பாடுகளுக்குப் பழக்கம் என்று பெயர்.

54. ஆன்மா: சத்தையும், சத்தியத்தையும் இணைக்கின்ற தொடர்பாக செயல்படுவதுதான் ஆன்மா. சத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பொழுது சத்தியம் ஆகிறது. அடுத்த கட்டமாக சத்திற்கும், சத்தியத்திற்கும் இணைப்புப் பாலமாக ஒன்று தேவைப்படும் பொழுது அந்த வேலையை ஆன்மா செய்கிறது.

55. சத்: பரப்பிரம்மம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பொழுது முதலில் சத்தாகத்தான் வெளி வருகிறது.



56. அசத்: பரப்பிரம்மத்திலிருந்து வெளிப்படாமல் அதற்குள்ளேயே மறைந்து கிடக்கின்ற விஷயங்களுக்கு அசத் என்று பெயர். இது சத்திற்கு எதிர்மறையானதாகும். உண்மையில் சத்தைவிட அசத் பெரியதாகும்.

57. சித்: எல்லா குணங்களையும் தாண்டி நிற்கின்ற பரப்பிரம்மம் சத்தாகத் தன்னை வெளிப்-படுத்திக்கொள்ளும் பொழுது தன்னைத்தானே உணர்ந்து கொள்ள விரும்புகிறது. அப்பொழுது சித் பிறக்கிறது.

58. ஆனந்தம்: இப்படித் தன்னை உணர்ந்து கொள்கின்ற பிரம்மம் தன்னைத்தானே அனுபவிக்கும் பொழுது ஆனந்தம் பிறக்கிறது.

59. மாயை: மாயை என்றால் பிரமை என்று கருதப்படுவது தவறு. பகவான் கருத்துப்படி பிரம்மம் படைப்பை நிகழ்த்த விரும்பிய பொழுது தனக்கென்று ஒரு படைக்கும் திறனை உருவாக்கிக் கொண்டது. அந்த படைக்கும் திறனுக்குத்தான் மாயை என்று பெயர்.

60. தெய்வத்தாய்: பிரம்மத்தினுடைய செயல்படும் சக்திக்குத் தெய்வத்தாய் என்று பெயர். தெய்வத்தாயின் பிறப்பிடம் சச்சிதானந்தத்தில் உள்ள சித்-சக்தியாகும். சித்-சக்திதான் அறிவும், ஆற்றலும் நிரம்பிய இடம். இதுதான் அன்னையின் பிறப்பிடம்.

*தொடரும்.....*

# லைப் டிவைன்

கர்மயோகி

## XXII. The Problem of Life

Life is infinite. Page No.207
It is absolute. Para No.1
It is untrammelled.
It is inalienably possessed of its own unity.
It is bliss.
It is the Conscious-Force of Sachchidananda.
A Conscious-Force puts forth life.
It is done under certain cosmic circumstances.
The nature of life is infinite, absolute, untrammelled, possessed of unity and bliss.
Mind is its central circumstance.
This Mind is obscured by ignorance.
Life differs in its appearance from purity.
It is the purity of infinite Existence.
The dividing faculty of the Mind is that circumstance.



## 22. வாழ்வின் பிரச்சனை

வாழ்வு அனந்தமானது.
வாழ்வு பிரம்மமானது.
வாழ்வு தடைகளால் பாதிக்கப்படாதது.
விலக்க முடியாத ஐக்கியத்தால் ஆளப்பட்டது.
அது ஆனந்தமயமானது.
வாழ்வு சச்சிதானந்தத்தின் சித்-சக்தி.
சித்-சக்தி வாழ்வை வெளிப்படுத்துகிறது.
குறிப்பிட்ட பிரபஞ்ச சந்தர்ப்பத்தில் இது நடக்கிறது.
வாழ்வின் சுபாவம் அனந்தம், பிரம்மம், தடையற்ற நிலையில் தன்னை ஆட்கொண்ட ஆனந்தம்.
மனம் வாழ்வின் மையமான சந்தர்ப்பம்.
இந்த மனம் அஞ்ஞானத்தால் சூழப்பட்டுள்ளது.
அதன் தூய்மையிலிருந்து வாழ்வு மாறுபட்டுத் தோன்றுகிறது.
அனந்தமான வாழ்வின் தூய்மை அது.
மனம் பிரிக்கும் கருவியாக இருப்பது அந்தச் சந்தர்ப்பம்.

It is a divided action of an undivided Force.
The result is dualities.
Oppositions and denials too arise.
The opposition is apparent.
The denials too are not real.
It is a denial of the nature of Sachchidananda.
They are an abiding reality for the mind.
It is only a phenomenon.
It misrepresents a manifold Reality.
There is a veil behind mind.
There is the divine cosmic consciousness behind mind.
The world takes on an appearance.
It is a clash of opposing truths.
They seek to fulfil themselves.
Each has a right to filfilment.
There is a mass of problems.
Equal amount of mysteries arises.
Behind them is the hidden Truth and Unity.

They press for solution.
They seek a solution for its unveiled manifestation in the world.

This solution has to be sought by the Mind.
But not by the mind alone.

Page No.207
Para No.2



முழுமையான சக்தியின் பிரிக்கும் செயலிது.
இதன் விளைவாக இரட்டைகள் உற்பத்தியாகின்றன.
எதிர்ப்பும், மறுப்பும்கூட எழுகின்றது.
எதிர்ப்பும் தோற்றம்.
மறுப்பும் உண்மையில்லை.
சச்சிதானந்த இயற்கையை அது மறுக்கிறது.
மறுப்பும் எதிர்ப்பும் மனத்தைப் பொருத்தவரை உண்மை.
அவை தோற்றம்.
பல அம்ச சத்தியத்தைத் தோற்றம் தவறாகக் காட்டுகிறது.
மனத்தின் பின் ஒரு திரையுள்ளது.
திரைக்குப் பின்னால் தெய்வீக ஜீவியம் மறைந்துள்ளது.

எனவே உலகம் ஒரு தோற்றம் பெறுகிறது.
எதிரான சத்தியம் முரண்படுகின்றது.
தங்களைப் பூர்த்தி செய்து கொள்ள அவை முயல்கின்றன.
அவற்றிற்கு அவ்வுரிமையுண்டு.
ஏராளமான பிரச்சனைகள் எழுகின்றன.
அதே அளவு புதிர் பிறக்கிறது.
இவற்றிற்குப் பின்னால் மறைந்துள்ள சத்தியமும் ஐக்கியமும் உண்டு.
அவை தீர்வு நாடி எழுகின்றன.
இதன் மூலம் திரை விலகிய சிருஷ்டிக்கு அவை தீர்வை நாடுகின்றன.

தீர்வை மனம் காண வேண்டும்.

ஆனால் இதை மனம் தனியாகக் காண முடியாது.

It has to be a solution in Life.
It must be a solution in the act of being.
It must also be a solution in the consciousness of being.
The world has movements.
The movements have their problems.
Consciousness as Force has created them.

Consciousness as Force has to solve the problems.
The world-movement has an inevitable fulfilment.

It has a secret sense.
It has an evolving Truth.
Consciousness as Force has created the world-movement.
It carries it.
But this Life has taken on appearances.
They are three in succession.
The first is material.
A consciousness is submerged.
It is concealed in action.
It is superficial as well as expressive.

It is concealed in force.
It is a representative form of force.
The action has these characteristics.
The second is vital.



இது வாழ்வுக்குரிய தீர்வாக இருக்க வேண்டும்.
இது ஜீவனின் செயலுக்குரிய தீர்வாக இருக்க வேண்டும்.
அது ஜீவனின் ஜீவியத்துக்கும் உரிய தீர்வாக இருக்க வேண்டும்.

உலகம் இயங்குகிறது.
இயக்கத்திற்குரிய பிரச்சனைகளுண்டு.
ஜீவியம் சக்தியாக பிரச்சனைகளையும், இயக்கங்களையும் உற்பத்தி செய்தது.
ஜீவியம் சக்தியாக, அப்பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்.
உலக இயக்கம் தவிர்க்க முடியாதபடித் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும்.
அதற்குரிய ரகஸ்ய உணர்வுண்டு.
பரிணாம வளர்ச்சி பெறும் சத்தியம் அதற்குண்டு.
ஜீவியம் சக்தியாக உலகத்தை இயக்குகிறது.

உற்பத்தி செய்ததைத் தாங்குகிறது.
இந்த வாழ்வு தோற்றங்களை ஏற்கிறது.
தொடர்ந்த மூன்று தோற்றங்களவை.
முதல் நிலை ஜடம்.
ஜீவியம் ஆழ்ந்து மறைந்துள்ளது.
அது செயலால் மறைக்கப்பட்டுள்ளது.
அச்செயல் மேலெழுந்தவாரியாக வெளிப்படும் தன்மையுடையது.
அது சக்தியுள் மறைந்துள்ளது.
அது பிரதிநிதித்துவம் வாய்ந்த ரூப சக்தி.
செயலுக்கு இந்த அம்சங்களுண்டு.
இரண்டாவது உயிரினுடையது.

There is an emerging consciousness.
It is half-apparent as power.
It is a power of life.
It is a process of growth.
It is an activity.
It is a decay of form.
It is half delivered out of its original imprisonment.
It has become vibrant in power.
It is seen as vital craving.
It is vital satisfaction or repulsion.
At first it is not at all so.
Then only it is imperatively vibrant in life.
It comes out as knowledge of its own self-existence and environment.
The third is mental.
An emerged consciousness reflects fact of life.
It is as mental sense, responsive perception and idea.

As a new idea, it tries to become fact of life.
It attempts to modify the being.
It tries to modify the internal existence of being.
It also tries to modify conformably the external existence of being.
Consciousness is imprisoned in the act.
It is in mind.
It is also imprisoned in the form of its own force.
But it is not yet the master of the act and form.



ஜீவியம் மறைவிலிருந்து வெளிப்படுகிறது.
அது பவராகப் பாதி தெரிகிறது.
அது வாழ்வின் பவர்.
அது வளரும் வகை.
அது செயல்.
அது ரூபம் அழிவது.
தான் சிறைப்பட்ட நிலையிலிருந்து பாதி விடுதலை பெறுகிறது.
அது பவருடைய துடிப்புள்ளது.
அது உயிரின் வேகமானது.
அது உயிருக்குத் திருப்தி அல்லது வெறுப்பு தரும்.
ஆரம்பத்தில் அது அது போலில்லை.
பிறகு அது தவிர்க்க முடியாத உயிர் துடிப்பைப் பெறுகிறது.
தன் வாழ்வின் ஞானமாக, சூழலின் ஞானமாக அது வெளி வருகிறது.
மூன்றாம் நிலை மனம்.
வெளிப்படும் ஜீவியம் வாழ்வின் உண்மையைப் பிரதிபலிக்கிறது.
மனத்தின் உணர்வாகவும், கண்ட உணர்வாகவும், எண்ணமாகவும் அதுள்ளது.
புது எண்ணமாக அது வாழ்வின் உண்மையாக முயல்கிறது.
அது ஜீவனை மாற்றியமைக்க முயல்கிறது.
அகத்தின் ஜீவனுடைய வாழ்வை அது மாற்ற முயல்கிறது.
அதே மாற்றத்தைப் புறத்தோற்றத்தில் நடைமுறையையொட்டி மாற்ற முயல்கிறது.
ஜீவியம் செயலுள் சிறைப்பட்டுள்ளது.
இது மனம்.
அது சக்தியின் ரூபத்திலும் சிறைப்பட்டுள்ளது.
இன்னும் ஜீவியம் செயலுக்கும் ரூபத்திற்கும் அதிகாரம் செலுத்தும் நிலையில்லை.

It emerged as individual consciousness.
It is aware of only fragmentary movements.
It is a fragment of its own total activities.

*Contd....*

❃❃❃

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பாடம்:

- அழைப்பை மறுக்காதே.
- ஆதரவு தராதே.
- அன்பும் சுயநலமே.
- எவரையும் நம்பாதே.
- நீ யாருக்கும் தேவையில்லை;
  உன் உடைமை தேவை.
- இல்லாததைக் கொடுக்க முடியாது.
- பிறர் சுயநலம் பேணுவது மடையனின் பாவம்.
- சேவை மனிதனுக்கில்லை.
- அன்பிருந்தால், அது அவளுக்கில்லை. அவனுக்கு.
- சிறிய மனிதனில் சிறப்பில்லை.



இது தனி மனித ஜீவியமாக வெளி வந்துள்ளது.
அதனால் அதற்குச் சிறு பகுதியே தெரியும்.
அதன் மொத்த செயலின் சிறு பகுதியையே அது அறியும்.

தொடரும்......

❃❃❃

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமர்ப்பணம் பலிப்பது என்றால் மையம் மனத்திலிருந்து நெஞ்சுக்குப் பின்னால் போகிறது என்று அர்த்தம்.

***மனம் வாழ்வுக்குரியது. நெஞ்சம் அன்னைக்குரியது.***

***மனம் நெஞ்சமாவது வாழ்வு திருவுருமாறுவது.***

***சமர்ப்பணம் பலிக்க மையம் மாற வேண்டும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகத்திற்குத் தவறானது வாழ்வுக்குச் சரியாகும். வாழ்வுக்குச் சரியானது கடவுளுக்குச் சரியில்லாமலிருக்கும். வாழ்வுக்குத் தவறானது தெய்வத்திற்குச் சரியாகும்.

***தெய்வமோ வாழ்வோ இடும் உத்தரவை ஏற்காவிட்டால், அதற்குரிய தண்டனை கிடைக்கும். வாழ்வு வலியுறுத்துவதைச் செய்ய வேண்டும்.***

# மஹாபாரதத்தில் சொல்லாதது எது!

M.மணிவேல்

"அதிர்ஷ்டம்" என்ற புத்தகத்தில், மஹாபாரதத்தில் விளக்கம் கூற முடியாதது எதுவாக இருக்கும் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதற்கு விடை காண்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம். அந்தக் கேள்வி "அதிர்ஷ்டம்" புத்தகத்தில் பக்கம் 164இல் இடம் பெற்றுள்ளது.

**"மஹாபாரதத்தில் விளக்கம் கூற முடியாத பகுதிகளுக்கு ஸ்ரீ அரவிந்தருடைய கருத்து எதுவாக இருக்கும்?"**

*உதாரணம்:* பிரம்மச்சாரியான பீஷ்மாச்சாரியார் உயிர் போகும்முன் அம்பாலான படுக்கையில் அவஸ்தைப்பட்ட காரணம் என்ன?

இதற்குப் பகவான் ஸ்ரீ அரவிந்தரின் ''THOUGHTS AND APHORISMS'', MOTHER VOLUME 10இல் உள்ள விளக்கத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**93. "Pain is the touch of our MOTHER teaching us how to bear and grow in rapture. She has three stages of her schooling, endurance first, next equality of soul, last ecstasy."**

**சில ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழில்:**

| | | |
|---|---|---|
| touch of | - | ஸ்பரிசம் |
| teaching | - | கற்பித்தல் |
| rapture | - | பரவசம் |
| stages | - | நிலைகள் |
| schooling | - | கல்வி (ஞான அறிவு) |
| endurance | - | தாங்கிக்கொள்ளுதல் |
| equality of soul | - | ஆன்மாவின் சமநிலை |
| ecstasy | - | ஆனந்தப் பரவசம் |



**93. "வலி என்பது நம் அன்னையின் ஸ்பரிசம். அன்னை நமக்குக் கற்பித்ததில், வலியை எவ்வாறு தாங்கிக்கொண்டு பரவச நிலையை அடைதல் என்பதாகும். அவர் பெற்ற கல்வி (ஞான அறிவு) மூன்று நிலைகளை உடையன. முதலாவதாகத் தாங்கிக்கொள்ளுதல் (பொறுத்துக் கொள்ளுதல்), அடுத்ததாக ஆன்மாவின் சமநிலை, கடைசியாக ஆனந்தப் பரவசம் அடைதல்".**

**குறிப்பு:** ஸ்பரிசம் என்பதற்கு ''நூறு பேர்கள்'' என்ற புத்தகத்தில், பக்கம் 368, 369இல் ஒரு விளக்கம் உள்ளது. அன்னை நம்மைத் தீண்டினால் - ஸ்பரிசம் - தீண்டுதல் இதுவரை நாம் அறிந்திராத குளிர்ந்த, இனிமையை உடலில் பரப்பும். ஸ்பரிசம் எப்படி ஏற்பட்டாலும் அது மாற்றத்திற்கு உதவும். நினைவு முதிர்ந்து அழைப்பானால் ஸ்பரிசம் மாற்றத்தைத் தரும் (பக்கம் 369இல்). ''அன்னையின் ஸ்பரிசம் பட்டவுடன் நம் வரையறை விசாலப்படுகிறது. மனம் பரந்த நிலை சந்தோஷம் உற்பத்தியாகும் நிலையாகிறது'', என்று வேறோர் இடத்தில் திரு.கர்மயோகி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (பக்கம் 257 - மேற்படி புத்தகம்). இந்த விளக்கம் பின்னால் வரும் விளக்கங்களுக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ அரவிந்தரின் நீதிமொழி 93க்கு அன்னையின் விளக்கம் விரிவாக உள்ளது. **MOTHER'S VOLUME 10** பக்கம் 169 முதல்.....

விளக்கத்தில் சுருக்கமாக சில விளக்கங்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவை பின்வருமாறு:

**MOTHER'S VOLUME 10, PAGE 169:**

> நீதி நெறி ஒழுக்கமுறைமை பொறுத்தமட்டில் (Moral) இது முற்றிலும் வெளிப்படையாகத் தெரியக்கூடியது. மறுக்க முடியாதது. ஒழுக்கம் சார்ந்த எல்லா துன்பங்களும் (Moral sufferings), சீலம் மிகுந்த உன்னுடைய நற்குணத்தை (character) சிறந்த முறையில் உருவாக்கி நேரே ஆனந்தப் பரவசத்திற்கு இட்டுச் செல்கின்றன.
>
> டாக்டர்களின் கூற்றுப்படி, ஒருவர் வலியை பொறுத்துக் கொள்ள உடலுக்குத் தக்க பயிற்சி அளித்தால், உடற்பிணி, அதிர்ச்சி, மாற்றம் முதலியவற்றிற்கு ஈடுகொடுக்கும் அளவு உறுதிவாய்ந்த தாக்க விளைவுகளைக் கையாளவல்ல சக்தியை உடல் மேன்மேலும் பெறுகிறது (Resilient). உடலில் ஏற்படுகிற தடைகள் முதலியவற்றின் கடுமையான தாக்குதல்கள் சுலபமாக தகர்க்கப்படுகின்றன (disrupted). இது ஒரு பிரத்யட்சமான செயலின் விளைவாகும். உடலில் எங்கேயாவது வலி ஏற்படும்போது உடலின் நிலைகுலைவை (upset) எவ்வாறு விலக்குவது என்று தெரிந்தவர்கள் விஷயத்தில், சீர்குலைவை (disorder) அமைதியாக பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் உடல் திறன், சிதறுண்டு போகாமல் உடலின் சக்தி அதிகரிக்கிறது என்று தோன்றுகிறது. இது ஒரு பெரிய சாதனையாகும்.
>
> உடல், வலியைத் தாங்கிக்கொள்ள முடிவு எடுத்தால்



> கடுமையான வலி மறைந்துவிடுகிறது. அகத்தில் ஆழ்ந்து அமைதியை ஏற்படுத்திக்கொண்டால் வேதனை ஒரு இன்பகரமான உணர்வாக மாறிவிடுகிறது.
>
> உடலில் உள்ள அணுக்களுக்கு இறைவனின் தரிசனத்திலும் (Divine Presence) தெய்வத்தின் சித்தத்திலும் (Divine Will) நம்பிக்கை வந்துவிட்டால், எல்லாம் நன்மைக்கே என்று திடமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், ஆனந்தப்பரவசம் ஏற்படுகிறது. உடலின் அணுக்கள் திறக்கப்படுகின்றன. இவ்வாறு, ஒளி வீசுகின்ற (Luminous) ஆனந்தப் பரவசம் நிகழ்கிறது.

**MOTHER'S VOLUME 10, PAGE 172, 173:**

> இறை உணர்வு நிலை, மற்றும் இறைவனுடன் ஐக்கியப்படுதல் பரவசத்தைக் கொண்டு வருகிறது. இது அடிப்படையான உண்மை.

இப்பொழுது, கேள்விக்கு விடை காண்பது பற்றி பார்ப்போம்.

பீஷ்மாச்சாரியார் உயிர் போகுமுன் அம்பாலான படுக்கையில் அவஸ்தைப்பட்டக் காரணம் தெரிந்துகொள்ள மஹாபாரதத்தில் அறியப்படாத உண்மைக்கு, பகவான் ஸ்ரீ அரவிந்தரின் "சிந்தனை மற்றும் நீதிமொழி''யில் (Thoughts and Aphorisms) விடை காணப்படுகிறது. இதனை விரிவாக அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, பீஷ்மர் வேதனைப்பட்ட விபரம் மற்றும் அவருடைய முற்பிறப்பின் வரலாறு பற்றி தெரிந்துகொள்வது அவசியமாகிறது.

## பீஷ்மர் அம்புப்படுக்கையில் சாய்ந்தது:

பாரதப்போரில் பத்தாம் நாள், பீஷ்மருக்கும் பாண்டவர்களுக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. அர்ச்சுனன் சிகண்டியை முன்னிட்டு பீஷ்மரைக் கொல்லும்படி விரைவுபடுத்தினான்.

பெண்ணின் தன்மை பெற்ற சிகண்டி முன் நிற்க, பீஷ்மர் தன்னுடைய தர்ம நெறிப்படி பெண்களைக் கொல்லக்கூடாது என்ற தர்ம சிந்தனையில் ஆயுதம் எடுக்காமல் இருந்தார். சிகண்டி மீது கணைகளைத் தொடுக்கவில்லை. அச்சமயம் காண்டீபனுடைய சரமாரியான அம்புகளால் பீஷ்மர் மூர்ச்சை அடைந்து தேரிலிருந்து கீழே விழுந்தார். உடல் முழுவதும் அம்புகளால் தைத்து மூடப்பட்டிருந்த பீஷ்மர், பூமியைத் தொடாமல் அம்புப்படுக்கையில் சாய்ந்தார். தந்தை வரத்தால் தான் நினைக்கும்போது உயிர் நீங்க உத்தராயணக் காலத்தை எதிர்நோக்கியிருந்தார். அம்புகளால் உயிர் வருத்தப்பட்டிருந்தாலும் மனத்தை ஒருநிலைப்படுத்தி ஆத்மாவில் ஆழ்ந்திருந்தார். *(அபிதான சிந்தாமணி, பக்கம் 1655).* உபநிஷதங்களையும் உச்சரித்துக்கொண்டிருந்ததாக பாரதக் கதையில் சொல்லப்பட்டிருக்கிறது. **இவ்வாறாக அவர் ஆழ்மனத்தின் அமைதியை அடைந்திருந்தார்**.

பகவான் ஸ்ரீ அரவிந்தரும், நம் அன்னையும் நீதிமொழி 93இல் கூறியதுபோல், பீஷ்மர் வலியைத் தாங்கிக்கொண்டு உள்ளூர ஆன்மாவில் ஐக்கியப்பட்டு சமநிலை அடைந்ததால், ஆழ் மனத்தின் அமைதியை அடைந்திருந்ததால், அவருக்கு வலி இன்ப உணர்வாக மாறி இருந்திருக்கலாம். பீஷ்மர் உயர்ந்த ஒழுக்க நெறியில் இருந்தவராதலால் உடலின் துன்பம் ஆனந்தப் பரவச நிலையாக மாறியிருந்திருக்கலாம் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

### பீஷ்மர் அம்புப்படுக்கையில் படுத்திருக்கும்படி நேர்ந்தது ஏன்?

பீஷ்மர் முற்பிறவியில், தேவர்களில் அஷ்ட வசுக்களில் ஒருவர். இந்த வசுக்கள் எட்டு பேரும் வசிஷ்டருடைய காமதேனு பசுவைக் கவர்ந்து சென்றதால் அவர்கள் பூலோகத்தில் மானிடர்களாக பிறக்கும்படி வசிஷ்டரால் சாபம் இடப்பட்டார்கள். பிறகு வசுக்கள் யாவரும் சந்தனு மகாராஜாவின் தேவியாகிய கங்கையிடம் பிறந்தார்கள். *(அபிதான சிந்தாமணி, பக்கம் 821; மஹாபாரத சாரம், பக்கம் 89).*



இவர்களில் ஏழு வசுக்கள் பிறந்தவுடனே கங்காதேவியால் கொல்லப்பட்டு கங்கையில் மூழ்கடிக்கப்பட்டு சீக்கிரமாக சாப விமோசனம் அடைந்தார்கள். *(மஹாபாரத சாரம், பக்கம் 90).* எட்டாவது வசு மட்டும் தன்னுடைய மனைவியின் சந்தோஷத்திற்காக காமதேனுவைக் களவு செய்ய விரும்பி, மற்ற வசுக்களையும் தன் தீய செயலுக்கு உட்படும்படி செய்து அவர்களையும் தன்னுடன் சேர்ந்து திருட்டுக் குற்றம் புரியத் தூண்டியதால், எட்டாவது வசுவின் குற்றம் கடுமையானது. **இந்த வசு, மற்ற வசுக்கள் சாபம் அடையக் காரணமாக இருந்ததாலும், பசுவைத் திருடியதாலும், கடுமையான குற்றத்திற்காக நீண்ட காலம் பூலோகத்தில் வசிக்கும்படியாக வசிஷ்ட முனிவரால் சாபம் இடப்பட்டான்**. எனவே, எட்டாவது வசுவான பீஷ்மர் இப்பிறவியில் பூலோகத்தில் நீண்ட காலம் இருந்து மரணத்தைத் தழுவி, சாப விமோசனம் பெற்றார்.

பீஷ்மர் மாவீரனாகவும், தர்மம் தெரிந்தவராகவும், சத்தியத்தைக் கடைப்பிடித்தவராகவும், பிரம்மச்சரியத்தில் கடுமையான விரதம் பூண்டவராகவும் இருந்தும், **முற்பிறவியில் செய்த திருட்டுக் குற்றத்திற்கு, இப்பிறவியில் அம்புப்படுக்கையில் வீழ்ந்து தண்டனை அனுபவிக்க நேர்ந்ததென்று தீர்க்கமாகத் தீர்மானிக்கலாம்**.

ஒரு பிறவியில் செய்த வினைப்பயனுக்கு அடுத்த பிறவியில் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்பது இயற்கையின் நியதி. இதற்குக் கடவுள்கூட விதிவிலக்கல்ல. மஹாவிஷ்ணு இராமாவதாரத்தில் வாலியை மறைந்து நின்று கொன்றார். அடுத்த கிருஷ்ணாவதாரத்தில் அந்த வினைப்பயனை அனுபவிக்க நேர்ந்தது. கிருஷ்ண பரமாத்மா, ஒரு வேடனால் மறைந்து நின்று அம்பு எய்தப்பட்டு மானிட வடிவு நீங்கப்பெற்றார். கிருஷ்ணாவதாரமும் முடிவுக்கு வந்தது.

பீஷ்மாச்சாரியார் உயிர் போகுமுன் அம்பாலான படுக்கையில் அவஸ்தைப்பட்டதற்கு, முன்வினைப் பயனே இப்பிறவியில் துன்பப்பட்டதற்குக் காரணமாக இருந்தது என்பதே **இரண்டாவது** கேள்விக்கு ஏற்புடைய பதிலாகக் கொள்ளலாம் என்பது நியாயமாகத் தோன்றுகிறது.

கேள்வியின் **முதல் பகுதிக்கு** ஸ்ரீ அரவிந்தருடைய கருத்து எதுவாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்தால், பகவானின் நீதிமொழி 93இல் கண்டுள்ள விளக்கங்கள் இக்கேள்விக்கு விடை காண துணைபுரிகின்றன. அந்த விளக்கங்களின் அடிப்படைகளைக் கொண்டு, பீஷ்மர் வலியைத் தாங்கிக்கொண்டு ஆன்மாவின் சமநிலை அடைந்து, ஆனந்தப் பரவசம் அடைந்து, வலியை இன்ப உணர்வாக மாற்றிக்கொண்டார் என்று கருதுவது சாலப்பொருந்தும். அவர் உடலில் அம்புகள் துளைக்கப்பட்டபோதும் துன்பத்தை இன்ப உணர்வாக மாற்றிக்கொண்டார் எனக் கருதலாம். மனவலிமையினால் உடல் வலியின் தாக்குதலைச் சுலபமாகத் தடுத்து நிறுத்தும் ஆற்றலைப் பெற்றிருந்தார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது. **பகவானின் நீதிமொழியின் கருத்துப்படி பீஷ்மர் வேதனையில் அவஸ்தைப்படாமல் இருந்தார் என்று எடுத்துக் கொள்வதே உசிதமாகும்**. எனவே, மஹாபாரதத்தில் விளக்கம் கூற முடியாத பகுதிகளுக்கு, ஸ்ரீ அரவிந்தரின் நீதிமொழி 93இல் கண்டுள்ள சூட்சுமமான கருத்துக்களாகத்தான் இருக்க முடியும் என்பதே கட்டுரையின் **முடிவு**.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பழக்கத்தைக் கொண்டு மனிதனை அறியவே முடியாது.



## அன்பர் கடிதம்

***ஓம் நமோ பகவதே ஸ்ரீ அன்னையே சரணம்!***

ஸ்ரீ அன்னை, பகவான், தவத்திரு கர்மயோகி அவர்களின் பாதாரவிந்தங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம். மகன் பிரசன்னா B.E. படித்து, பின்னர் சிங்கப்பூர் Universityஇல் MS படித்து, பின்னர் அங்கேயே ஒரு நிறுவனத்தில் பணி செய்து வந்தது எல்லாம் ஸ்ரீ அன்னையின் திருவருளே என்று விரிவாக ஏற்கனவே தங்களுக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தேன். அக்கடிதம் ஜூன் 2008ஆம் ஆண்டு மலர்ந்த ஜீவியத்தில் பிரசுரமும் ஆகியுள்ளது. அதன் பின்னரும் அன்னையின் அருள் எங்கள் வாழ்வில் செயல்பட்டதைக் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கிறேன்.

மகனுக்கு 2007ஆம் ஆண்டு கடைசியில் சிங்கப்பூரிலேயே Intel நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அமெரிக்காவில் யூட்டா என்ற இடத்தில் traineeஆக அனுப்பினார்கள். அங்கு பனிப்பொழிவு மிக அதிகம். இதற்கிடையில் மே 2008இல் அவனுக்கு அன்னையின் அருளால் திருமணமும் நடைபெற்றது. அவனுக்கு அந்நாட்டில், இந்நிறுவனத்தில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் இல்லாமல் ஆகி, போன 2008 அவ்வேலையை விட்டு திரும்ப சிங்கப்பூர் வந்து வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டான். அப்பொழுது உலகெங்கும் recession period. பிரபல நிறுவனங்களில் எல்லாம் ஆட்குறைப்பு நடைபெற்ற சமயம். திருமணம் ஆன 6 மாதத்தில் இந்த மாதிரி recession periodஇல் வேலையை விட்டுவிட்டு வந்தது குறித்து வருந்தி தினமும் அன்னையிடம் கூறிப் பிரார்த்தனை செய்து வந்தேன். இந்நிலையில் 6 மாதங்கள் கடந்துவிட்டது. மார்ச் 2009 கடைசியில் (25.3.09) என நினைக்கிறேன், நான் அலுவலகம் செல்லும் போது trainஇல் அன்னையிடம் கண் மூடி பிரார்த்தனை செய்தபடி இருந்தேன்.

என்னையும் அறியாமல் எனக்குள் உள்ள அன்னையின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விட்டு, "அக்குழந்தைக்கு வழி காட்டுங்கள் அம்மா'' என்று அழுகிறேன். ஆனால் நான் இறங்க வேண்டிய இடம் வந்தபின் என் உணர்வே இன்றி என்னை யாரோ அழைத்துக் கொண்டு போவது போல் நடந்து அலுவலகம் சென்றேன். அலுவலகத்தில் என் tableஇல் bag வைத்தவுடன் என் cell phoneஇல் மகன் கூப்பிட்டு, "அம்மா எனக்கு Hyderabadஇல் ஒரு private companyஇல் வேலை கிடைத்துவிட்டது'' என்றும், சிங்கப்பூரிலிருந்து கிளம்பி வருவதாகவும் தெரிவித்தான். அன்னைக்கு உடன் நன்றி சொன்னேன். ஆனாலும் இச்சம்பவத்தை நினைத்தும் அன்னையின் கருணையை நினைத்தும் கண்ணீர் பெருகுகிறது. இச்சம்பவம் என் மனத்தில் ஸ்ரீ அன்னை, "மகளே, நான் இருக்கும்போது நீ ஏன் கண்ணீர் விடுகிறாய்'' எனக் கூறி, கண்ணீரைத் துடைத்துவிட்டது போல் உணர்கிறேன்.

இந்நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம். புதியதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமும்கூட. ஒரு வருடம் கழித்து அவன் தகப்பனார், "வேறு கம்பனிகளுக்கு மனு போட்டுக்கொண்டே இரு. கிடைத்தால் மாறிவிடு" என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அவனோ, இந்நிறுவனம் வேலை கிடைக்காத periodஇல் தனக்கு வேலை கொடுத்ததாகவும், அதிலிருந்து உடனடியாக விலகுவது முறையல்ல என்றும், அந்நிறுவனம் ஓரளவு லாபம் ஈட்ட ஆரம்பித்தால்தான் வேறு கம்பனிக்கு போவது குறித்து மனுப் போட இயலும் என்றும் கூறிவிட்டான். அவனுடைய இக்கருத்து மிகவும் நியாயமானதால் அன்னையே எல்லாம் பார்த்துக் கொள்வார் என இருந்துவிட்டோம்.

இந்நிலையில் அந்த நிறுவனத்திற்கு மெஷின்கள் purchase செய்ய 2010 செப்டம்பர் மாதம் அவன் அலுவலக நண்பருடன் பாண்டி வந்து 5 நாட்கள் தங்கும் சூழ்நிலையை அன்னை கொடுத்தார். அச்சமயம் அவன் அன்னையின் சூழல் உள்ள



புண்ணிய பூமிக்கு செல்வது அன்னையின் அருள் என்று நினைத்தேன். அங்குதான் ஸ்ரீ அன்னையின் கருணை மீண்டும் செயல்பட்டது.

அக்டோபர் 2010இல் தற்போது வேலை பார்க்கும் கம்பனியில் sales deptஇல் ஏற்பட்ட பிரச்சனையில் நிறுவன ஸ்தாபகர் உடனடியாக இவன் கீழ் வேலை பார்க்கும் 10 நபர்களைக் குறைக்க வேண்டும் எனச் சொல்லியிருக்கிறார். மேலும் இக்கம்பனியின் fundsஐ வேறு ஒரு பிஸினஸ்க்கு (business) திருப்பவும் நிர்வாகம் உத்தேசித்துள்ளது.

இவனுக்கு BE (Mech.) படித்ததால் manufacturing lineஇல் வேலை பார்த்தால்தான் நல்ல future என்று நினைத்து அக்கம்பனியில் தொடர்ந்து இருக்க விரும்பாமல் வேறு வேலைகளுக்கு அக்டோபர், நவம்பர் 2010இல் மனுப் போட்டான். டிசம்பர் மாதம் interview வர ஆரம்பித்தது. அச்சமயம் நான் அவர்களுடன் Hyderabadஇல் இருந்தேன். நான் அவனிடம், "Intel வேலையை விட்டது தொடர்பாக உன்னிடம் உள்ள தவறுகளை அன்னையிடம் சமர்ப்பித்து மன்னிப்பு கோரினால் தடங்கலின்றி அன்னையின் அருள் செயல்படும்'' எனத் தெரிவித்து நானும் தீவிரமாக பிரார்த்தனை செய்தபடி இருந்தேன். அன்னையின் எல்லையற்ற கருணையால் ஒரு leading நிறுவனத்தில் பொறுப்பான வேலை கிடைத்துள்ளது. March 2011, 1ஆம் தேதி வேலைக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்ரீ அன்னைக்குத் தினமும் மனமுருகி நன்றி தெரிவித்து வருகிறேன். அன்னையைத் தவிர என்னிடம் அன்பு கொள்ளவோ, கருணை காண்பிக்கவோ எவரும் இல்லை என்பதை பரிபூரணமாக உணர்கிறேன். எனது இனிய அன்னையே, கருணைக் கடலே, பொன்னொளி வீசும் தங்கள் சன்னதியில் அடைக்கலமாய் வந்துள்ளோம். காத்து வரமருள்வாய் தாயே. ஸ்ரீ அன்னைக்கும், பகவானுக்கும் அனந்த கோடி நமஸ்காரமும் நன்றிகளையும் சமர்ப்பிக்கிறேன்.

அப்பா, தங்களுடைய எழுத்துகள்தான் எனக்கு உறுதுணையாக உள்ளது. தங்களுடைய படைப்புகள் மூலம்தான் அன்னையைப் பற்றி அறிந்து, அன்னையின் அளவற்ற கருணையைப் பெற முடிகிறது. தவறுகளையும் திருத்திக்கொள்ள முயற்சியும் எடுக்க முடிகிறது. தங்களுக்கு என் பணிவான நமஸ்காரத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-- நன்றியுடன் பூர்ணவள்ளி, சென்னை.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னை மீதுள்ள பக்தி அகங்காரத்தைத் தடை செய்ய அனுமதிப்பது இல்லை.

***அன்னை அன்பரின் அன்புக்கு அன்னையே பாதுகாப்பு.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சமர்ப்பணம் முடியாத நேரம் அழைப்பு உதவும். அழைப்பும் முடியவில்லையெனில் தியானம் உதவும். தியானம் வரவில்லையெனில் வாயால், நெஞ்சால் 'அன்னை' அன்னை எனச் சொல்லலாம்.

***முடியுமிடத்தில் ஆரம்பிக்க வேண்டும்.***

***எதுவும் முடியாது என்பதில்லை.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 51. தீமையை முழுமையாகக் காணும் திறன் - சிருஷ்டியின் ஒருமை.

- இது தெய்வங்கட்குரிய திறன். அவர்களையும் சில சமயம் கடந்தது என்று கூறலாம்.
- தெய்வங்கள் தீமையை அழித்துள்ளதால், அவர்கள் அதை நன்மையாகக் காணவில்லை என்று அறிகிறோம்.
- அன்னை கடலோரம் உள்ள ஆசிரம தென்னந்தோப்புக்குப் போனார்கள்.
- ஒரு கருநாகம் அவரை நோக்கி விரைந்து வந்தது.
- உடனிருந்த சாதகர்கள் ஓடிவிட்டனர்.
- அன்னை நகரவில்லை.
- நாகம் அருகில் வந்தது.
- அன்னை சிரித்து, "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.
- நாகம் படமெடுத்துத் தரையில் படத்தால் அடித்துவிட்டு, வேகமாகத் திரும்பியது.
- "எனக்கு வணக்கம் சொல்ல வந்தது" என்றார் அன்னை.
- அன்னைக்கு நாகம் விஷமல்ல, தீமையல்ல, பயப்படுவ- தில்லை.

  அன்னையை நாகம் அறிந்தது. நாகத்தை அன்னை அறிவார்.
- தீமை நன்மையின் பழுத்த ரூபம் நன்மையைக் காவலாகச் சூழ்வது என்று *The Life Divine* கூறுகிறது.
- பகவான் கூறுவதால் ஏற்றுக் கொள்ளலாம், நம் அறிவுக்கு எட்டாது.

- சண்டி செய்யும் குழந்தையின் மீது தாய்க்குள்ளது அன்பு.
- குழந்தை பள்ளிக்கூடம் போக, மருந்து சாப்பிட, சாப்பாடு சாப்பிட மறுக்கிறது.
- தாயின் சாதுர்யம் குழந்தையிடம் பலிக்கவில்லை.
- தனக்குக் குழந்தை மேலுள்ள அன்பை, குழந்தை நலனைத் தாய் காப்பாற்ற வேண்டும்.
- குழந்தையைக் கண்டிக்கிறாள், பலனில்லை.
- குழந்தையைக் கடுமையாக அடிக்கிறாள்.
- தாயின் அன்பு நன்மை.
- அடிப்பது தீமை.
- அன்பு கனிந்து, அன்பின் பலனாக உயர்ந்த கல்வியை பாதுகாக்க அரணாக அமைவது தாயின் கொடுமை.
- நன்மையின் சிறப்பு அரணாக நன்மையைக் காக்கும் திறன், தீமை.
- ஒரு சிறிய அளவில் டார்சி "பரவாயில்லை" எனக் கூறியதை எலிசபெத் விளையாட்டாக எடுத்துக் கொண்டதில் காணலாம்.
- அதே சந்தர்ப்பத்தில் வேறொரு பெண்ணிற்கு எரிச்சல் பொங்கி வரும்.
- ஆண் பெண் முன் மண்டியிட்டுப் பேசும் நாடு அது.
- பெண்கள் உள்ளே வந்தால் அனைத்து ஆண்களும் எழுந்து மரியாதை செய்வார்கள்.
- மனைவி பெண் என்பதால் அவள் செய்வது தவறு எனக் கூறுவது அநாகரிகம் என்பது அந்த நாட்டு நாகரிகம்.
- ஒரு பெண்ணை உயர்வாக அவளிடம் பேசுவது மரியாதை. உயர்வாகப் பேச மறுப்பது அநாகரிகம்.
- பரவாயில்லை என்பது, அவள் காதுபடப் பேசுவது மன்னிக்க முடியாத கொடுமை.



- எலிசபெத் அதைப் பொருட்படுத்தவில்லை. கேலியாக எடுத்துக் கொண்டாள்.
- அதன் பலனிரண்டு. (1) அவனை வாயாரத் திட்டினாள், (2) பெம்பர்லிக்குத் தலைவியானாள்.

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சொல்லி நடக்காதது மௌனத்தால் நடக்கும்.

மௌனத்தாலும் நடக்காதது மௌனமான செயலால் நடக்கும்.

சமர்ப்பணமும் சரணாகதியும் அவற்றைக் கடந்தவை.

***முடிவில்லாத பொறுமையின் முடிவு யோகம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மூலத்தை அறியாமல், எல்லாப் பகுதிகளையும் அறிவதால் ஞானம் பெற முடியாது. மூலம் தெரிந்தவுடன் பகுதிகள் தெளிவு பெறும்.

***மூலம் ஞானம் தரும்.***

***மூலமின்றி முழுமையில்லை.***

***விபரம் தெரிவதால் மட்டும் விஷயம் தெரியாது.***

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

231. *மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல.*

**அன்னையை நம்பி ஆற்றில் இறங்கினால்**
**மண்குதிரையும் கரையாது.**

232. *கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை.*

**மனிதனுக்குத் தெரியுமா, மதருடைய மகிமை.**

233. *தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல சீலை.*

**நினைவைப் போல் நிலை.**

234. *ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.*

**பெரிய திட்டத்திற்கு ஒரு சொல் பதம்.**

235. *உப்பிட்டவரை உள்ளளவும் நினை.*

**ஒரு முறை தரிசித்தவரை உயிருள்ளவரைக்**
**காப்பாற்றும் அன்னை.**

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

- மலருக்கு மணம் உண்டு.
- மலர் மற்றவற்றிற்கு மணம் தரும்.
- மலரிடம் மண்ணும் மனம் பெறும்.



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### ✡ அகப்பை செய்தவன் முழு தச்சன்

அகப்பை தேங்காய் ஓட்டில் 3 கண்கள் உள்ள பகுதியில் செய்யப்படுவது. கண்கள் மென்மையாக இருக்கும். பிடியை 2 கண்கள் வழியாகப் *பொருந்தும்படி* பொருத்த வேண்டும். கற்பதன் முன் 10 அல்லது 20 பிடிகளும் பொருந்தா. அகப்பையில் தண்ணீரை ஊற்றினால் ஒழுகும். தச்சனிடம் பயிற்சி பெறுபவர் அகப்பையைச் சரியாக செய்தால், பயிற்சி முடிந்துவிட்டது எனப் பொருள்.

- வீட்டை அதிகபட்சம் வளரும் வகையில் நிர்வாகம் செய்பவன் ஊரை ஆள்வான், உலகையும் ஆள்வான்.
- அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, நண்பர்கள், உறவினருடன் ஒத்துழைப்பவர் - வீட்டு மனிதர்களை நிர்வாகம் செய்ய நீ உனக்கு அடங்க வேண்டும். வீட்டில் உன் அதிகாரம் சென்றால், உலகில் உன் அதிகாரம் செல்லும்.
- தோல்வியை நினைத்துப் பார். தோல்வியுற்ற இளைஞனை உன்னால் தோல்வியிலிருந்து விடுவிக்க முடியுமானால், இனி உனக்குத் தோல்வியில்லை. இன்று உலகில் முதன்மையான கம்பனி ஜெனரல் (GM) மோட்டார்ஸ். Ford முதலாவதாகவும் GM தூரத்து இரண்டாம் கம்பனியாகவுமிருந்த பொழுது

சுலோவன் என்பவர் தலைவரானார். இவர் இன்ஜீனியரிங் முடித்து வேலைக்குப் போகாமல் 1920இல் தகப்பனாரிடமிருந்து $ 5000 கடன் பெற்று திவாலான கம்பனியை வாங்கி இலாபகரமாக்கினார். பிறகு GMஇல் சேர்ந்து தலைவரானார். Ford காரைக் கண்டுபிடித்தவர். அவர்கள் டெக்னாலஜிக்குப் பேர்-போனவர். சுலோவன் டெக்னாலஜியைவிட organisation நிர்வாகம் முக்கியம், மார்க்கட் முக்கியம் என்று அறிந்தவர். 10 அல்லது 20 ஆண்டுகட்குள் GM முதலிடம் வந்துவிட்டது. சுமார் 10 ஆண்டுகளாக முதலிடத்திலேயே இருக்கிறது. சட்டம் என்ன?

*முடிந்தால் செய், பிறர் மீது குறை கூறாதே.*

- அகப்பையில் திறமை உண்டு. உலகுக்குத் தேவைப்பட்ட எல்லா திறமைகளும் வீட்டில் உண்டு. தொலைந்த பொருளைக் கண்டுபிடிப்பதிலும், விருந்தாளியை வரவேற்பதிலும், பாத்ரூமை சுத்தம் செய்வதிலும் அது தெரியும்.
- அகப்பை செய்வது சிறிய வேலை. அதில் சூட்சுமமில்லை. ஆனால் தச்சனுக்கு அது முக்கியம்.

### ✡ மனம் என்று இருக்கும்வரை 'பொறுக்க முடியாது' என்ற நிலை எழும்

- எனக்குப் பொறுக்காது, தாங்காது எனக் கூறும்வரை வாழ்வில் எதைப் பெறுகிறார்களோ, அன்னையிடம் எந்த prosperity பலிக்கிறதோ அது விஷயமில்லை.
  - அவர்கட்கு அன்னையின் பெரிய (infinite out of finite) பரிசு - "100 ரூபாயை"க் கடுகாக்கும் பரிசு - இல்லை.
  - மனம் இருந்தால் 'நான்' இருக்கும்.
  - அதுவரை - மனமும், நானும் - வாழ்வு, அன்னையில்லை.

*அதுவே கோடு, எல்லை, Line என்பது.*

  - எல்லையைத் தாண்டினால், எல்லைகாளியா-வோம்.
  - எல்லையைத் தாண்டாதவரை வாக்காளர் (voter), எல்லையைத் தாண்டினால் வேட்பாளர் candidate. எந்த வேட்பாளர் (MLA or MP) candidate என்பதைப் பர்சனாலிட்டி நிர்ணயிக்கும்.
  - எதையும் நிர்ணயிப்பது பர்சனாலிட்டி - நாழியின் அளவு, நானாழி முகக்கும் நாழி தேவை.

### ✡ நமக்கு யாரைப் பிடிக்கும் என்பது நாம் யார் என அறிவிக்கும் (We are what we are towards friends and enemies)

விவரம் தெரிந்தவர்கள் தமக்குப் பிறரைப் பிடிக்கும், பிடிக்காது என எளிதில் சொல்லமாட்டார்கள்.

- அப்படிச் சொல்வதால், நமது படிப்பு, அறிவு, செல்வம், பதவி, பண்பு, நாகரிகம், இராசி, பதம், பக்குவம் முழுவதும் வெளிப்படையாகத் தெரியும்.

  ஒருவர் தமக்கு நல்ல பழக்கமான பெரிய மனிதர்கள் பெயரையும், இடங்களையும் கூறினால், அவர் அந்தஸ்தில்லாதவர் என அறிவிப்பதாகும்.

நாகரிகமான ஊர்களிலிருந்து நாகரிகமற்ற ஊர் மனிதர்களைச் சந்தித்தால் இந்த வேறுபாடு உடனே தெரியும்.

ஆங்கிலேயர் நாட்டை ஆண்ட நாளில் அவர்களை நடமாடும் தெய்வமாக நினைத்தனர். 'துரை' என அழைத்தனர். தஞ்சாவூர் என அவருக்கு வாயில் வரவில்லையெனில் Tanjore என்றார். அதைப் பார்த்துத் தமிழ்நாடு 200 ஆண்டுகளாக Tanjore எனப் பெருமையாகக் கூறியது. வெள்ளைக்கார மோகம் உச்சகட்டமாக இருந்த காலத்தில் நடந்த செய்திகள் பல. வெள்ளைக்காரர் குளிக்காததால் நம்மவரில் சிலர் அவர்களைப் போல் குளிக்கமாட்டார்கள். குளிக்கவில்லை எனப் பெருமையாகவும் கூறுவார்கள். நம்மவரில் பெரும்பான்மையோரால் குளிக்காமலிருக்க முடியாது. அது வீட்டுப் பழக்கம். பிறந்த ஊர், வறண்ட பிரதேசம், அநாகரிகமான பெற்றோர் பெற்றவர் குளிக்காமலிருப்பதுண்டு. அவர்கள் ஆங்கிலேயர் போல் தாமும் குளிக்கவில்லையென நினைத்தால் மற்றவர் அவருடைய வீட்டுப் பண்பைப் புரிந்து கொள்வார் என அவர்கள் அறியார். அது தெரிந்தால் இப்படிப் பெருமைப்படமாட்டார்கள்.

*எதற்குப் பெருமைப்படுவது என்ற பாகுபாடில்லையா?*

- தான் படித்த பெரிய புத்தகங்களைப் பற்றிப் பேசுபவர் மொத்தமாக அவர் படித்தது 4, 5 புத்தகம் என்று அறிவிக்கிறார் என அறியமாட்டார்.
- 'நான் உதவி பெறமாட்டேன்' என்பவர் 'நான் சுயநலம்', 'எவருக்கும் உதவமாட்டேன்' எனக் கூறுகிறார். நாம் எப்படிப் பழகினாலும் உள்ளது வெளி வந்துவிடும்.



## ✡ தலைகீழ் மாற்றம்

- **நடந்ததை மறந்து ஏற்பதைவிட நடந்தது நல்லது என அறிந்து ஏற்பது பூரணயோகம்.**

இதன் நிலைகள் எட்டு.

முரண்பாடு உடன்பாடு என்பது முதல்.

இறைவனை எதிர்த்துப் போரிட்டு சீக்கிரம் அடையலாம் என்பது எட்டாம் நிலை.

**நம் வாழ்வில் இவ்வெட்டு நிலைகளையும் அறிவது ஆத்ம ஞானம், ஏற்பது யோகம்.**

***சூன்யம் வைத்ததால் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டது.***

நண்பர் செய்த துரோகம், தியாகி நம்பிக்கை துரோகம் செய்தது, முழு நம்பிக்கை முழுத் துரோகமானது, பொறுப்பை ஏற்று அது தன்னிடமிருப்பதால் சொத்தை அழித்து ஆர்ப்பாட்டம் செய்தது, கொடுத்ததை வாங்கிவிட முடியுமா எனக் கொக்கரித்தது, தானே வந்து சேர்ந்து உரிமை கொண்டாடுவது, கேட்கமாட்டார் என்பதால் கேவலமாக நடப்பது, நடந்தபின் அது ஒரு பெரிய விஷயமா எனக் கேட்பது, உரிமையுள்ளவர் உதவ மறுத்து பிறகு உதவி கேட்பது, காலணா தனக்கு ஆதாயத்திற்குப் பிறருக்கு நாலணா நஷ்டம் வைக்கக் கூச்சப்படாதது, கோள் சொல்வதற்குப் பெருமைப்படுவது, ஜாக்கிரதை, ஒட்டுக் கேட்டு உயிரை எடுப்பேன் என வெட்கமின்றிப் பேசுவது, தான்

பெருநஷ்டமடைந்தாலும் பிறருக்கு உள்ள உரிமையை மறுக்கும் ஆர்வமாகச் செயல்படுவது போன்ற பழக்கங்கள் மனித சுபாவத்தை மனத்திற்கு விளக்கும்.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னை *The Life Divine* படிக்க உதவும் மூக்குக் கண்ணாடி.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னையை அழைக்கும் பொழுது அழைப்பு சந்தோஷம் கொடுத்தால் அந்த நேரம், ஞானம், அன்பாக மாறும் நேரம்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கடந்ததை அன்னையிடம் கூறினால் கர்மம் கரையும்.

***பட்டவனிடம் செய்த பாவத்தைக் கூறினால் கர்மம் கரைந்து அதிர்ஷ்டம் உற்பத்தியாகும்.***



## சிந்தனை மணிகள்

N. அசோகன்

1. நாம் வெளியில் செய்யும் வேலை கொண்டு வரும் வருமானத்தைவிட உள்ளே செய்கின்ற வேலை பல மடங்குக் கூடுதலான செல்வத்தைக் கொண்டுவர வல்லது. உள் வேலையைப் பற்றிய இரகசியங்களை ஸ்ரீ கர்மயோகி அவர்களுடைய புத்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். மழைக்கால வெள்ளம்போல செல்வம் உங்கள் வாழ்க்கையில் நுழைவதைப் பாருங்கள்.
2. எந்த ஒரு செயல்பாட்டிற்கும் நாம் மேலோட்டமாகப் புரிந்து கொள்வதைவிட ஒரு ஆழ்ந்த அர்த்தம் எப்பொழுதுமே உள்ளது என்று ஸ்ரீ அன்னை சொல்கிறார். நாம் எப்பொழுதுமே அந்த அர்த்தத்தை உணர்ந்துகொண்டோம் என்றால் வாழ்க்கை நம் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும்.
3. கவலையாலும், பிரச்சனையாலும் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள் தலையை அன்னையின் மடியில் புதைத்துக் கொண்டு தங்கள் கவலைகளை எல்லாம் மறந்து கண்களை மூடிக் கொண்டு ஐந்து நிமிடம் இருக்கலாம். அதன் பின்னர் அவர்கள் வாழ்க்கை மாறி இருப்பதை பார்க்கலாம்.
4. பெரிய ஆன்மீக மகானான புத்தபிரான்கூட ஆன்மா என்ற ஒன்று கிடையாது என்று ஒரு தவறான கருத்தை வெளியிட்டார். ஏசுபிரானும் அன்பின் அருமையைப் பற்றி பேசினாரே தவிர உண்மையின் ஆட்சியை நிலைநாட்டு-வதற்குரிய சக்தி இல்லாமல் இருந்தார். ஆனால் பகவான் மற்றும் அன்னையின் பூரண ஆன்மீகம் எந்தவிதமான தவறுகளும் குறைபாடுகளும் இல்லாத ஒரு வாழ்க்கையை நமக்கு அளிக்க முன்வருகிறது. மேலும் பழைய தவறுகளைத்

திருத்திக்கொண்டு வாழவும் வழி செய்கிறது. பழங்காலத்து மகான்களுக்குக்கூட இல்லாத ஒரு அறிவை பூரணயோகம் நமக்கு இன்று வழங்குகிறது. ஆகவே இதையெல்லாம் எண்ணிப் பார்த்து நாம் இந்த வாய்ப்பை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. இன்றுள்ள மனநிலையில் நம்முடைய உடம்பு, உயிர், வேலை, வருமானம், வாழ்க்கைத் துணை மற்றும் குடும்பம், இளமை, உடல் நலம், சமூக அந்தஸ்து என்று எல்லாவற்றையும்விட அன்னைக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று சொல்ல முடியுமா? நாம் சொல்வதை அன்னை நம்பினார் என்றால் அந்த நிமிடத்திலிருந்து நம் வாழ்க்கையில் நிகழக்கூடிய அற்புதங்களை நாம் பார்க்கலாம். நாம் சொல்வதை அவர் நம்பவில்லை என்றாலும் பரவாயில்லை. நம்முடைய சின்சியரிட்டியை நாம் அதிகரித்துக் கொள்ள முயற்சி எடுக்கலாம். நம்முடைய சின்சியரிட்டிக்கு ஒரு வரையறை இருந்தாலும் பரவாயில்லை. அன்னை தாராள குணம் படைத்தவர். அதனால் அவர் நாம் எப்படியிருக்கிறோமோ அப்படியே நம்மை ஏற்றுக்கொள்வார் என்று நாம் நம்பலாம்.

6. ஆன்மீக உலகத்தினுடைய பொக்கிஷங்களை சிறிதளவு ஒருவர் பார்த்திருந்தால்கூட பணம், பதவி, சிற்றின்பம் ஆகியவற்றைத் தேடுவதில் மக்கள் காட்டுகின்ற தீவிரத்தைவிட இந்த ஆன்மீகச் சிறப்புகளை இன்னும் தீவிரமாக அவர் நாடுவார். நம்மில் பல பேர் இன்னமும் பணம், பதவி, சிற்றின்பம் என்று இவற்றைத்தான் தீவிரமாகத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்றால் ஆன்மீக உலகைத் திறந்து காட்டும் கதவுகளை நாம் இன்னமும் தாண்டிச் செல்லவில்லை என்று அர்த்தமாகிறது. அந்த உலகத்தின் கதவுகள் மூடியிருக்கின்றன என்றும் சொல்ல முடியாது. அது



திறந்துதான் இருக்கிறது. நாம்தான் வேறு ஒரு மூடியிருக்கின்ற கதவுகளுக்கு முன்னால் நின்றுகொண்டு அதைத் திறந்து காட்டும்படி அன்னையிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அன்னை ஆன்மீக உலகின் கதவுகளைத்தான் திறந்து காட்ட விரும்புகிறார். ஆனால் நம்முடைய பார்வை இப்படி வேறு ஒரு கதவின்மேல் பதிந்துள்ளது வருத்தத்திற்குரியது. நம்முடைய பார்வையை அகல விரித்து அன்னை என்னதான் நமக்குக் காட்ட விரும்புகிறார் என்று நாம் பார்க்க முன் வர வேண்டும்.

7. நமக்குப் பிரச்சனைகள் வரும்பொழுது தவிர மற்ற நேரங்களில் அன்னையை நாம் நினைக்காமல்கூட இருக்கலாம். ஆனால் அதற்காக அன்னை நம்மைப் பற்றி இடைவிடாமல் நினைக்காமல் இருக்கிறார் என்று அர்த்தமில்லை. நம்முடைய சிறுமைக்கு ஏற்றபடி நாம் நடந்து கொள்கிறோம். அவருடைய பெருந்தன்மைக்கு ஏற்றபடி அவர் நடந்து கொள்கிறார்.

8. எனக்கு 13 அல்லது 14 வயது இருக்கும் பொழுது என்னுடைய பிறந்த நாள் அன்று அன்னையிடம் ஆசி வாங்கச் சென்றேன். அவர் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்து ஒரு ரோஜா வழங்கினார். அவருடைய பேச்சு என் காதில் விழுந்தது. இன்றும் அந்த புன்முறுவலும், அவருடைய குரலும் என் நினைவில் இருக்கிறது. என் வாழ்க்கையின் மிகவும் சிறப்பான தருணம் எதுவென்றால் நான் இதைத்தான் சொல்வேன். இப்படி உங்கள் வாழ்க்கையில் சிறப்பான தருணம் என்னவென்று சிந்தித்துப் பாருங்கள்.

9. அன்னையின் அன்பும் அவருடைய விவேகமும் ஒன்றுக்கொன்று எதிரான திசையில் வேலை செய்கிறது. அவருடைய அன்பு நமக்கு வழங்கப் பிரியப்படுவதை அவருடைய விவேகம் தடுக்கலாம். அல்லது அவருடைய

விவேகம் நம் மேல் திணிக்க விரும்புவதை அவருடைய அன்பு நம்மேல் திணிக்கவிடாமல் தடுக்கலாம். இப்பொழுது உங்களுக்கு அன்னையின் அன்பு வேண்டுமா? அல்லது விவேகம் வேண்டுமா? இரண்டுமே ஒரே சமயத்தில் கிடைக்காது. ஏதேனும் ஒன்றைத்தான் நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்.

10. உலகம் முழுவதும் செலவு வளரும் வேகத்திற்கு ஈடாக வருமானம் வளர்வதில்லை என்று எல்லோரும் குறைபட்டுக் கொள்கிறார்கள். அன்னை அன்பர்களும் இதற்கு விதிவிலக்கு இல்லை. இப்பொழுது எப்பொழுதுமே செலவை முந்திக் கொண்டு வருமானம் வளர்வதற்கு என்ன வழி இருக்கிறது என்று அன்பர்கள் பார்க்க வேண்டும். இப்படி எப்பொழுதுமே செலவை முந்திக் கொண்டு வருமானம் வளர்ந்தால் பற்றாக்குறை என்ற பேச்சிற்கே இடமில்லை. உலகத்தாருடைய பொதுவான இக்கருத்தை நீங்களும் ஆமோதிக்கின்றீர்களா? அல்லது அன்னையின் அருளின் உதவியுடன் எப்பொழுதுமே செலவைவிட வருமானத்தை வளர்த்துக் கொள்ளலாம் என்று நம்புகின்றீர்களா?

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

முகம் மூலத்தைக் காட்டாது.



*இம்மாதச் செய்தி*

# பேரதிர்ஷ்டம் பெருவெள்ளமாகப் புரண்டு வரும்பொழுது பரம்பரை தரித்திரத்திற்கு அதை விட்டுப் போகத் தோன்றும்.

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/45) பற்றாக்குறையை உபரியாக்கி, வாழ்வைப் பூரணப்படுத்த முடியாது. பகுதியை முழுமைப்படுத்தினால் முடியும்.**

☆ **உபரி பூரணம் தராது, முழுமை தரும்.**

- சிரங்குக்கு மருந்து தடவலாம், அது உதவும், நிலையான குணம் தராது.
- இரத்த சுத்திக்குரிய மருந்தும், உணவும் உதவும்.
- முறைகள் மூலத்தை நாட வேண்டும்.
- மூலத்தை நாடுவது பல வகை.
    - வருமானத்தை உயர்த்தும் மூலம் திறமை.
    - திறமையை உயர்த்தும் மூலம் கல்வி.
    - கல்வியின் தரத்தை உயர்த்தும் மூலம் பண்பு.
    - பண்பின் மூலத்தை உயர்த்துவது இலட்சியம்.
    - இலட்சியங்களில் உயர்ந்தது மனிதத் தன்மை.
    - மனிதத் தன்மையைப் போற்றும் அஸ்திவாரம் வன்முறை அழிந்த சமூகம்.
    - வன்முறைக்கு எதிரானது (human relationship) பழக்கம்.
    - பழக்கம் உயர்வது அறிவின் தீட்சண்யத்தால்.
    - அறிவு பகுதியானது.
    - ஆத்மா முழுமையானது.
- பற்றாக்குறை பகுதிக்குரியது.
- உபரி முழுமைக்குரியது.
- எந்த சமூகம் ஒரு கொள்கையாக பகுதியைப் பாராட்டாமல், முழுமையைப் பாராட்டுகிறதோ, அங்கு பற்றாக்குறை-யிருக்காது.



- வேதம் இயற்கையோடு ஒன்றி வாழ முயன்றது. பற்றாக்குறை அவர்கள் அறியாதது.
- பகுதியின் திறமை உயர்ந்து வளரும் உபரி, முடிவில் பெரிய பற்றாக்குறையை ஏற்படுத்தும்.
- 20ஆம் நூற்றாண்டு கண்ட வித்தைகள் ஏராளம் - கார், விமானத்திலிருந்து போன் வரை ஆயிரம் டெக்னாலஜி உலகை அலங்கரித்தது.
- இவற்றுள் எதுவும் முழுமையை நாடவில்லை.
- அனைத்தும் பகுதியையும், பகுதியின் பகுதியையும் நாடினர்.
- (Specialisation) பகுதியின் சிறப்பைப் பாராட்டும் முறை அடிப்படை.
- இன்று பெட்ரோலைப் பற்றி என்ன நினைப்பது, எப்படிப் பேசுவது எனவும் அறிய முடியாத நிலையை அடைந்து விட்டோம்.
- நாடு பகுதி, உலகம் முழுமை என்ற நிலையை 1900இல் நாம் எட்டிவிட்டோம்.
- இயல்பான வளர்ச்சியை மனிதன் புறக்கணித்து வசதியான வாழ்வைத் தேடுவதை மனிதன் மேற்கொண்டாலும், இயற்கையும், இயல்பும் தம் போக்கை ஓரளவு வற்புறுத்து-கின்றன. அதன் விளைவு,
    - மனிதன் உலகத்திற்குப் பொதுப் பணம் உற்பத்தி செய்ய மறுத்தால் US டாலர் அந்தக் கடமையை மேற்கொள்-கிறது.
    - உலக சர்க்கார் நிறுவும் நேரம் வந்தபின் உலகம் பேசாமலிருந்தால் ஏகாதிபத்தியங்கள் அக்கடமையைச் செய்கின்றன. Common Wealth ஏற்படுகிறது. EU எழுகிறது. USSR ஏற்பட்டு விரிவடைகின்றது.

✦ ஜீவன் முழுமைக்குரியது. பகுதிக்கல்ல.
✦ பகுதி பற்றாக்குறை.
✦ முழுமை உபரி.
✦ இது ஆன்மீகச் சட்டம், அடிப்படைக் கொள்கை.
✦ சச்சிதானந்தம் முழுமையுடையது.
✦ சத் பகுதி, சித் பகுதி, ஆனந்தம் பகுதி.
✦ மனம் பகுதியை நாடிற்று.
✦ சத்தியஜீவியம் முழுமையாக இருக்கிறது.

✵✵✵

**II/46) பிரம்மம் ஜடத்தில் சித்தித்தால் வாழ்வு பூரணம் பெறும். அல்லது அறியாமை ஞானத்தைவிடப் பெரியது எனக் காண வேண்டும்.**

☆ **பிரம்மம் ஜடத்தில் பெறும் பூரண ஞானம் முழுமை.**

✣ பிரம்மம் ஜடத்தில் பூரணம் பெறுவது தத்துவமாகிறது.

மக்களாட்சியில் வாக்காளர் அரசியல் தலைவர்களைவிட முக்கியம் என்பது எளிய உண்மை.

✣ குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பதும் அதே தத்துவம்.

✣ கொல்லையில் தான்யத்தைக் காய வைத்துக் காலால் துழாவி விட்டு வெளி வரும்பொழுது தான்யத்தை தான்யலக்ஷ்மி எனக் கண்ணில் ஒற்றிக்கொள்வது ஜடத்தைப் பிரம்ம-மாக்குவது.

✣ பெரியது சிறியதைப் பாராட்டும்.

சிறியதைப் பாராட்டும் மனப்பான்மையே அதைப் பெரிய-தாக்குகிறது.

சிறியதைச் சிறியதாகக் காணும் மனம், சிறுமையை விட்டு அகல முடியாத மனம், காலத்திற்கும் சிறியதாகவே இருக்கப்போகும் ஜீவன்.



✣ ஒரு ஊரில் போய் குடும்பம் செய்ய வேண்டுமானால் உன் தொழிலை மட்டும் பாராட்டுவது பகுதி.

ஊரை முழுவதும் மனதால் ஏற்று செயல்படுவது முழுமை.

பகுதியாக வாழ்பவனுக்கு எந்த நேரமும் சிரமம் எழும்.

முழுமையைப் பாராட்டுபவனுக்குச் சிரமம் எழ வழியில்லை. எந்த நேரமும் வாய்ப்பு வந்தபடியிருக்கும்.

✣ அறியாமை ஞானத்தைவிடப் பெரியது என்பதை உலகுக்கு முதலில் கூறியவர் பகவான்.

அப்படியானால் சிருஷ்டி பிரம்மத்தைவிடப் பெரியது.

வாக்காளர் அரசைவிடப் பெரியவர்.

வாடிக்கைக்காரர் கடைக்காரரைவிடப் பெரியவர்.

மாணவன் ஆசிரியரைவிட உயர்ந்தவர்.

கல்வி கற்பவரைவிட உயர்ந்தது.

நடிகன் இலக்கியத்தைவிட உயர்ந்த நிலையிலிருப்பவன்.

✣ உழவன் கணக்குப் பார்த்தால் உழவு கோலும் மீறாது என்பது சொல்.

உழவன் அந்தக் கணக்கைப் பார்த்தால் உலகம் பட்டினி கிடக்கும்.

கணக்குப் பார்ப்பது பகுதி.

கடமையைக் கருதுவது முழுமை.

✣ உலகம் முன்னேறுவது விஞ்ஞானத்தால்.

விஞ்ஞானம் என்பது நம்மைப் பொருத்தவரை டெக்னாலஜி, தொழில் நுணுக்கம்.

அச்சாபீஸ் வந்த காலத்தில் அது புரட்சி.

தினசரிப் பத்திரிகைகள் பிரெஞ்சுப் புரட்சியை மிஞ்சியவை.

மக்களாட்சி வந்தது ஆயிரம் புரட்சிகளின் திரட்சி.

சிகரமான மன்னன் சிரச்சேதம் அடைந்தான்.

சொத்தே பதவி என்ற நிலை மாறி நியாயத்திற்கு வலிமை வந்தது.

பணமேயெல்லாம் என்பது போய் பண்பு பணத்தைவிட உயர்ந்ததாயிற்று.

ஏழ்மை கொடுமைக்காளாகும் என்பது பழைய நிலை.

எளிமைக்குரிய உயர்வு ஆடம்பரத்திற்கில்லை என்பது புது நிலை.

எந்தக் கலையும் பணக்காரனுடைய ஆதரவு தேடிற்று.

கலை பணம் சம்பாதிக்கும் என்பது மார்க்கட் கூறும் உண்மை.

ஜடம் ஜீவனற்றது என்பது மரபு.

ஜடத்தின் அணுவுள் அகில உலகமும் அடங்கும் சக்தியுண்டு என்பது அணு ஆராய்ச்சி.

பெண்ணுக்குரியது சமையலறை என்ற பழைய சட்டம் மாறி பெண்ணுக்கு முதலிடம், அது போக ஆணுக்கு என்பது புதியது.

ஜடம் பிரம்மம்.

ஜடப் பிரம்மம் பிரம்மத்திற்கு உரிய உயர்வு.

ஜடம் என்பது தாழ்வில்லை.

ஜடம் உலகை உட்கொண்ட சக்திக்குரிய லோகம்.

✲✲✲

## II/47) பிரம்மமும் சிருஷ்டியும் ஒன்றே. நம் பார்வைதான் மாறுகிறது என்றறியும் நேரம் வாழ்வு பூரணம் பெறுகிறது.

- **சிருஷ்டியில் பிரம்மத்தைக் கண்டால் வாழ்வு பூரணம் பெறுகிறது.**



- மஞ்சள்காமாலை கண்ணுக்கு எல்லாம் மஞ்சளாகத் தெரியும், எதுவும் மஞ்சளில்லை.
- காமாலை நோய் தானே போக வேண்டும்.
- நாம் போட்டிருப்பது மஞ்சள் கண்ணாடி. எப்பொழுது வேண்டுமானாலும் அகற்றலாம்.
- கண்ணாடிதான் உலகை மஞ்சளாகக் காட்டுகிறது என அறிய வேண்டும்.
- இந்தக் கண்ணாடியை நாம் எந்த நேரத்திலும் கழட்டலாம் எனத் தெரிய வேண்டும்.
- கழட்ட முடிவு செய்ய வேண்டும், கழட்ட வேண்டும்.
- 6 குருடர்கள் யானையை வர்ணித்தார்கள்.
- அவர்களை யானையைப் பார்க்க வைப்பது முடியாது.
- குருடனுக்குப் பார்வை வந்தால்தான் அது நடக்கும்.
- மனிதன் குருடனல்லன்.
- மனிதன் கண்மூடி குருடனாக இருக்கிறான்.
- கண் திறப்பது முடியாத காரியமில்லை.
- கண் திறந்தால் யானையைப் பார்க்கலாம். அதுவே மனிதனுடைய நிலை.
- மனிதன் அகந்தையால் குருடனாக இருக்கிறான்.
- மனிதன் குருடனில்லை.
- இந்தக் குருட்டுத்தனம் ஆயிரம் வகையாக வாழ்வை ஆட்கொள்கிறது.
  - மேல்நாட்டு விஞ்ஞானிக்கு விஞ்ஞானம் குருடு.
  - அமெரிக்கர்கட்கு தன்னம்பிக்கை தலைமையளித்தது.
  - அதே தன்னம்பிக்கை அவரைக் குருடாக்கியது.
  - இங்கிலாந்து மக்களாட்சிக்குத் தாய்.
  - அந்த இங்கிலாந்து மன்னரைப் போற்றி அழிகிறது.

- வேதமும், உபநிஷதமும் இந்தியாவுக்கு இரு கண்கள், கீதை நெற்றிக்கண். பிராமணனின் மறுப்பு இந்தியாவைக் குருடாக்கியது.

  (The final refusal of Brahmin – Sri Aurobindo).
- கிராமத்து மனிதனுக்கு நகரத்திலுள்ள கொள்ளை வாய்ப்பு தெரிவதில்லை.
- ஆண்டுதோறும் வேலை தேடும் 70 லட்சம் இளைஞர்கட்கு (self-employment) சொந்தத் தொழில் செய்யும் வாய்ப்பு கண்ணில் படுவதில்லை. வேலை தேடி அலைகிறார்கள்.

  வேலையில்லாத் திண்டாட்டம் என்கின்றனர்.
- 1970இல் நான் பார்த்துப் பேசிய எந்த இளைஞரும் பாங்கு உதவி செய்யும் என்பதை அறியவில்லை.
- செல்போனில் உள்ள வசதிகளை 7% பயன்படுத்துவது போல் இன்று பாங்கு வழங்கும் உதவிகளை 10%க்கு மட்டும் பெறுகின்றனர்.
- ஐரோப்பியர் பெற்ற உயர்ந்த பண்பையும், அது வழங்கும் சுபிட்சம், தலைமையையும் அறியாது, அமெரிக்காவை எதிர்பார்க்கின்றனர்.
- கீதை, மகரிஷி, தியானம் இவற்றின் பெருமையை இந்தியர் அறியாமல் அமெரிக்கர் பாராட்டியபின் ஏற்றுக் கொள்கின்றனர்.
- பணத்தை உற்பத்தி செய்த மனிதன் பணத்திற்கு அடிமையானான்.
- தானே இறைவன் என்பதை குருடர் போல் மறந்து இறைவனை எங்கும் தேடுகிறான் மனிதன்.

*தொடரும்....*

❋❋❋





## *Page 41* சிருஷ்டிக்கு அப்பால் ஜனிக்காததை எட்டினால் நமக்குப் பிறப்பு இறப்பிலிருந்து விடுதலையுண்டு.

- பிறப்பும் இறப்பும் வாழ்வுக்குரியன, ஆத்மாவிற்கல்ல.
- பிறப்பு, இறப்பு உடல் வாழ்விற்கு, புற வாழ்விற்குரியன.
- ஆத்மாவிற்குரியது அக வாழ்வு.
- அகவாழ்வில் ஆத்மாவை மனமும், உணர்வும் சூழ்ந்துள்ளன.
- மனம் காலத்திற்குரியது.
- புறம் இடத்திற்குரியது.
- புறத்திலிருந்து அகத்திற்குச் செல்வது புலனிலிருந்து மனத்தையடைவது.
- புலனைக் கடந்து மனத்தை அடைவதைப் புறம் அகமாவது என்று கூறலாம்.
- அகத்தில் மனத்தைக் கடந்தால், ஆத்மாவையடையலாம்.
- மனம் என்பது நமக்கு நினைவு, சிந்தனை, கற்பனை.
- நினைவிழந்து, சிந்தனை அற்று, கற்பனை அடங்கினால் மனம் அடங்கும்.
- மனம் அடங்கினால், மனம் அழிவதாகாது.
- மனத்தைக் கடக்க மௌனம் தேவை.
- நினைவழிந்த மௌனம் வேறு, சிந்தனையற்ற மௌனம் வேறு.
- நினைவு, சிந்தனை, கற்பனை மனத்தின் பகுதிகள்.

- மௌனம் மனத்தின் பகுதிகளைக் கடக்க உதவும்.
- மனம் அழியாது, நாம் கடக்கலாம்.
- மனத்தில் செயல்கள் அடங்கியபின், மனமே அடங்கும்.
- மனம் அடங்கினால் நாம் மேல் மனத்தைக் கடக்கலாம்.
- அதனால் அடிமனம் போய்ச் சேரலாம்.
- ஜனிக்காததை எட்ட, சிருஷ்டியைக் கடக்க வேண்டும்.
- சிருஷ்டியைக் கடக்க, பிரம்மத்தை எட்ட வேண்டும்.
- பிரபஞ்ச மூலமோ, பிரபஞ்சத்தைத் தவிர்த்தோ பிரம்மத்தை அடையலாம்.
- பிரம்மத்தை அடைவது ஜனிக்காதவனை அடைவது.
- அதனால் பிறவிச்சூழலிலிருந்து விடுதலையுண்டு.
- நாம் இதை மோட்சம் என்று கூறுகிறோம்.
- மோட்சம் ஐந்து நிலைகளில் உண்டு.
- ஜீவன் முக்தன், பரமாத்ம மோட்சம், பிரம்மத்தின் மூன்று நிலைகள்.
- பிரம்மத்தின் முதல் நிலையை அடைந்தாலும் பிறவிச் சூழலிலிருந்து விடுதலையுண்டு.

❋❋❋

**ஜீவிய மணி**

***சிறியது கீழே வந்தால் பெரியதாகும்.***





# சரண்டர் சத்யன்

இல. சுந்தரி

பிரான்ஸ்சுமாநகரின் செல்வந்தர் வசிக்கும் பகுதி அது. அங்கு ஒரு வீட்டில் லூயி என்ற பெயர் கொண்ட துடிப்பான இளம்பெண். வீட்டிலுள்ள புத்தக அலமாரியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறாள். நிறைய படிப்பதில் பேரார்வம் கொண்டவள். அடுத்தவர்க்கு உதவி செய்வதிலும் ஆர்வம் கொண்டவள்.

புத்தகங்களை எடுத்துத் துடைத்து வரிசைப்படுத்தும்போது, ஒரு புத்தகத்திலிருந்து ஓரிளம் பெண்ணின் புகைப்படம் கீழே விழுந்தது. கையில் எடுத்துப் பார்த்தாள். யாரெனத் தெரியவில்லை. அந்தப் புத்தகத்தின் பெயரும் சற்று வித்யாசமாய் இருந்தது.

உடனே அப்புத்தகத்துடன், புகைப்படத்தையும் கையில் எடுத்துக்கொண்டு தன் தாயிடம் ஓடினாள். ''அம்மா, இந்தப் புகைப்படத்தில் இருப்பவர் யார்? இது யாருடைய புத்தகம்?" என்று கேட்டாள்.

அதைக் கையில் வாங்கிய அவள் தாய் ஒரு கணம் அப்படத்தை உற்றுப் பார்த்தாள். லேசாகக் கண்கலங்கினாள்.

"சொல்லம்மா. இந்தப் புகைப்படத்திலிருப்பவர் யார்? அது ஏன் இந்தப் புத்தகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது?'' என்றாள் மேலும்.

''மறைத்து வைக்கப்படவில்லை. மறந்து வைக்கப்பட்டிருக்கிறது" என்றாள் அம்மா.

"யாரிவர்? இவரை ஏன் மறந்துவிட்டீர்?"

"இவர் உன் பாட்டியாரின் (தன் தாயின்) சகோதரி" என்றாள் அம்மா.

“நானிவரைப் பார்த்ததில்லையே” என்றாள் லூயி.

‘‘ஆம், இவர் இளம் வயதிலேயே இந்தியாவிற்குச் சென்றுவிட்டார். அதனால் அவருடன் நம் குடும்பத்திற்கு தொடர்பு நின்றுவிட்டது” என்றாள் தாய்.

லூயிக்கு தன் இந்தியப் பாட்டியாரைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாயிருந்தது. அவள் இந்தியாவைப் பற்றி நிறையப் படித்திருக்கிறாள். அது தெய்வீகம் நிறைந்த மண் என்று அதன் மீது அவளுக்குப் பெருமதிப்பிருந்தது. அத்தகைய இந்தியாவிற்குத் தன் பாட்டியார் இளம் வயதிலேயே ஏன் சென்றிருக்க வேண்டும் என்றறிய ஆசைப்பட்டாள்.

‘‘ஏனம்மா இவர் இளம் பருவத்திலேயே இந்தியா சென்று விட்டார்? இப்போது இவர் எங்கிருக்கிறார்?” என்றாள்.

‘‘அந்தக் காலத்தில், நம் (பிரெஞ்சு) நாட்டில் பிறந்த மிரா என்பவர் மிகுந்த ஆன்ம நாட்டத்துடனிருந்தாராம். யோக சக்தி பெற்றிருந்தாராம். அவர் இந்தியாவில் தம் குருநாதர் இருப்பதை உணர்ந்து அங்குச் சென்று, பாண்டிச்சேரியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அரவிந்தரே தம் குழந்தைப் பருவ முதல் தாம் தம் தியானத்தில் கண்ட, தாம் ‘கிருஷ்ணா’ என்று பெயரிட்டிருந்த யோகி என்பதை உணர்ந்து அவருடன் தங்கி பூரணயோகம் என்ற யோகத்தைச் செய்தாராம்.

ஸ்ரீ அரவிந்தர் என்ற அந்த தெய்வீக புருஷர் தம் யோக சக்தியால் ‘மிரா’ என்ற பெயர் தாங்கி வந்த அவரே பரம்பொருளின் மகாசக்தி என்பதைக் கண்டுணர்ந்து கூறினாராம். அதன் பிறகு ‘மிரா’ என்ற அவரை அனைவரும் ஸ்ரீ அன்னை என்று அழைத்து அவர் மீது பக்தி கொண்டு பேரின்பம் அடைய ஆரம்பித்தார்களாம். இது பற்றியெல்லாம் அறிந்த இந்தப் (புகைப்படத்தைக் காட்டி) பாட்டியார் அப்போதே இந்தியாவிற்குச் சென்று ஸ்ரீ அன்னைக்குத் தொண்டு செய்து வாழ ஆரம்பித்தார். அப்போது அவர் அனுப்பிய புத்தகம்தான் இது. இது பற்றி இங்கு ஒருவர்க்கும்



ஆர்வமில்லாததால் இவர் புகைப்படத்தை இப்புத்தகத்தில் வைத்ததும் அப்படியே இருக்கிறது” என்றாள்.

‘‘இப்போது அவர் எங்கிருப்பார்? அவரை நான் போய்ப் பார்க்க முடியுமா?” என்றாள் லூயி.

“இல்லை கண்ணே. அவர் இப்போது உயிருடனில்லை. அவர் வாழ்ந்த இடம் பாண்டிச்சேரியில் ஸ்ரீ அன்னை இருந்த வீடு’’ என்றாள் அம்மா.

லூயிக்கு மேற்கொண்டு அறிந்து கொள்ள இந்த விபரம் போதுமானதாயிருந்தது. அன்றே அவள் பாட்டியார் இருந்த இடத்துடன் தொடர்பு கொண்டு, ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் பற்றிய புத்தகங்களையெல்லாம் வரவழைத்துவிட்டாள். ஸ்ரீ அன்னையின் எழுத்துகள் அவள் தாய்மொழியிலேயே இருந்ததால் ஒன்றிய உணர்வுடன் அவற்றைப் படித்துணர முடிந்தது.

‘படிக்கப் படிக்க எவ்வளவு சுவையாக இருந்தது. என் தாய் மண்ணில் அவதரித்த ஒரு புனிதரைப் பற்றி இதுநாள் அறியாதிருந்தேனே. எனக்கிதனை நினைவூட்டிய என் பாட்டியாரே! நீர் எத்துணைப் பேறுபெற்றவர். ஸ்ரீ அன்னை என்பவர்க்குத் தொண்டு செய்த உம்மைப் பாட்டியார் என்றழைக்க நானும் சிறிது புண்ணியம் செய்தவளே’ என்றெல்லாம் எண்ணியவண்ணம் தினமும் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரைப் பற்றியும், சாதகர்களின் அனுபவங்கள் பற்றியும் இராப்பகலாய்ப் படிக்கலானாள்.

என் தாய்நாட்டில் அவதரித்தவர், எல்லோரும் மானுடமாய்க் கண்டபோது, இந்தியத் திருநாட்டில் அவதரித்த ஒரு மகாபுருஷரால் மகாசக்தி என அடையாளம் காட்டப்பட்டவர். சிறு வயதிலேயே தியானம் செய்தவர். இரவில் பாரிஸ் நகரில் பிரமாண்டமாய் வானுயர எழுந்து நிற்க, அவர் அணிந்த பொன்னாடை குடை போல் விரிந்து பூமியளவும் பரவ துன்புற்றோரெல்லாம் வந்து அப்பொன்னாடையைத் தீண்டியமாத்திரத்தில் துன்பம் தீர்த்து மகிழவைத்தவர் என்று அவரைப் பற்றி எண்ணி எண்ணி மகிழ்வெய்தினாள். மேன்மேலும் அவர் கோட்பாடுகளைப் படித்தறிந்து

மேற்கொள்ளவும் ஆர்வங்கொண்டாள்.

முன்கோபமுடையவளான லூயி சாந்தசொரூபியாய் மாறுவதைக் கண்ட தாய் மகிழ்ந்தாள். அவள் அவசரம் நிதானமாய், பொறுமையாய் மாறுவது கண்டு மகிழ்ந்தாள். அதே நேரம் இவளும் தன் சிற்றன்னையைப் போல் வீட்டைத் துறந்து போய்விடுவாளோ என அஞ்சியவண்ணம், ''லூயி, என் கண்ணே, நீயே என் ஒரே பற்றுக்கோடு. எங்கே நீ என்னைப் பிரிந்து சென்றுவிடுவாயோ என்று அச்சமாக உள்ளது'' என்றாள்.

''இல்லையம்மா, பயப்படாதே. ஸ்ரீ அன்னை என்பவர் திருவுடல் தாங்கி பாண்டியில் இருந்ததால் என் பாட்டியார் அங்குச் சென்றார். ஆனால் இன்று அவர் என் இதயத்திலேயே இருப்பதால் நான் எங்கும் செல்லத் தேவையில்லை. அவர் நினைவுடன் வாழ்வேன். அவர் கோட்பாடுகளை ஏற்று வாழ்வைத் தெய்வீக வாழ்வாக மாற்றுவேன். அவரை அறியாது துன்பத்தில் உழல்கின்றவர்களுக்கு அவர் அன்பை, அவர் அருளைப் பெற உதவுவேன். அதற்கு முன் ஒரே ஒரு முறை அவர் எழுந்தருளியிருந்த பாண்டியிலுள்ள திருக்கோயிலை தரிசிக்க நீ என்னை அனுமதிக்க வேண்டும்'' என்றாள்.

அப்போது திடீரென்று அவளுக்குத் தன் தோழியின் சகோதரி தெரசாவின் பெண் குழந்தை மோனா ஏழு வயதாகியும், உடல் வளர்ச்சி குன்றி, மனவளர்ச்சியே இல்லாது மரக்கட்டைபோல் இருப்பது நினைவுக்கு வந்தது.

உடனே அவள் ஸ்ரீ அன்னையைப் பற்றிய செய்திகள், அன்னையின் திருவுருவப் படங்கள் இவற்றுடன் தெரசாவின் வீட்டிற்குச் சென்றாள்.

தெரசா தன் பெண் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு, "இறைவா! இவள் மானுடமா? மரக்கட்டையா? எனக்கேன் இந்தச் சோதனை? நீர் கருணை உள்ளவர்தாமா? இல்லை, கடுமையானவரா?" என்று புலம்பிக் கொண்டிருந்தாள்.



அப்பொழுது அங்கு வந்த லூயி, ''அக்கா, கடவுள் கருணையுள்ளவர்தாம். பிரச்சனையை வாய்ப்பாக மாற்றும் கடவுளைக் கொண்டு வந்திருக்கிறேன். உமக்கொரு நற்செய்தி கூறவே இப்பொழுது வந்தேன்" என்றாள்.

லூயியின் முகத்தில் தெளிவும், பிரகாசமும் இருந்தது. அவள் பேச்சு நம்பிக்கையூட்டுவதாய் இருந்தது.

"இந்தக் குழந்தையின் நிலையில் மாறுபாடு ஏற்படாதவரை எனக்கேது நற்செய்தி?" என்று விரக்தியாகக் கூறினாள் தெரசா.

"பிரபல அமெரிக்க மருத்துவரிடம் சென்றிருந்தீர்களே, அவர் என்ன கூறினார்?" என்று லூயி விசாரித்தாள்.

''அவர் தம் அனுபவத்தில் குணப்படுத்த முடியாத நோய் இருந்ததில்லையென்றும், இவள் விஷயத்தில் தம் திறமை பொய்த்துவிட்டது என்றும் கூறினார்" என்றாள் தெரசா.

''அக்கா, நீங்கள் கவலைப்படுவதை நிறுத்திவிட்டு, நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் இம்முறை நிச்சயம் மோனா குணமடைந்துவிடுவாள். அது குறித்து தெய்வாதீனமாய் எனக்கொரு செய்தி கிடைத்திருக்கிறது. அதைச் சொல்லத்தான் ஓடிவந்தேன்" என்றாள் லூயி.

''சொல் லூயி. எதுவானாலும் சொல். என் மகள் மனமும், உடலும் வளர வேண்டும். அவளும் மற்ற குழந்தைகளைப் போல் ஓடி விளையாட வேண்டும். எத்தனை மருத்துவம் செய்தோம். எவ்வளவு பணம் செலவு செய்தோம். பலனேதும் இல்லை. நான் மனம் சோர்ந்துபோன நேரத்தில் வந்து நம்பிக்கையூட்டுகிறாய். சொல் லூயி" என்றாள்.

தான் பழைய புத்தகமொன்றில் தன் சிறிய பாட்டியாரின் புகைப்படத்தைக் கண்டெடுத்ததையும், அவர் தம் இளம் பருவத்தில் ஸ்ரீ அன்னை என்பவரால், அவர் தெய்வீகத்தால் ஈர்க்கப்பட்டு இந்தியாவில் பாண்டிச்சேரியில் அவரிருந்த இடத்தில் சென்று சேர்ந்துவிட்டதையும், ஸ்ரீ அன்னையின் மகாசக்தி பற்றியும் கூறி,

கொண்டு வந்த ஸ்ரீ அன்னையின் திருவுருவப் படங்களையும் கொடுத்தாள். அத்துடன், தான் இந்தியா செல்ல விரும்புவதையும் கூறினாள். தெரசா இயல்பாகவே மென்மையும், நல்லெண்ணமும் கொண்ட பெண் ஆதலால் தம் தாய்நாட்டில் அவதரித்த ஸ்ரீ அன்னையைப் பற்றிய செய்திகள் அவளைப் பெரிதும் கவர்ந்தன. ஸ்ரீ அன்னை தம் யோகத்தால் சத்தியஜீவிய சக்தியைப் புவிக்குக் கொண்டுவந்துள்ளதையும், ஆழ்ந்த நம்பிக்கையும், தூய பக்தியும் அதைச் செயல்படவைக்கும் என்பதையும் பூரணமாய் நம்பினாள். நம்பினாளோ அல்லது அவள் மகள் நிலை அவளை நம்பவைத்ததோ, இந்தியா செல்ல வேண்டும் என்ற எண்ணம் மட்டும் வலுப்பெற்றது. தன் கணவர் வந்ததும் இவற்றைக் கூறிப் புறப்பட ஏற்பாடு செய்வதாய்ச் சொன்னாள்.

ஆனால் தெரசாவின் கணவருக்கு இதில் நம்பிக்கையில்லை. பெரும் மருத்துவ நிபுணர்கள் செய்ய முடியாததை ஒரு சக்தி செய்யும் என்பதை அவர் நம்பவில்லை. இந்தியர்களுக்கு மூடநம்பிக்கைகள் அதிகம் என்று கூறியபோதும், தம் மனைவியின் மன ஆறுதலுக்குத் துணையாக இருப்பது தன் கடமை என எண்ணி புறப்படச் சம்மதித்தார். லூயியும் இந்தியா செல்லத் தயாரானதால் மூவரும் புறப்பட்டனர்.

லூயி தன் பாட்டியார் தங்கி வாழ்ந்த இடம் என்பதால் முன்னதாகத் தொடர்பு கொண்டு சென்னையிலிருந்து நேரே பாண்டிக்குச் செல்ல ஏற்பாடு செய்திருந்தாள். அவர்கள் சென்னையில் ஒரு ஹோட்டலில் தங்கி, மறுநாள் பாண்டிச்சேரி செல்வதாய் முடிவாயிற்று.

லூயி, தெரசா குடும்பத்தினரிடம் விடை பெற்று பாண்டி புறப்பட்டாள். மறுநாள் அன்னை இருந்த இடத்தில் லூயியும் தெரசாவும் சந்திக்கத் தீர்மானித்தனர். தடையில்லாத பயணம் தெரசாவிற்கு நம்பிக்கையூட்டுவதாயிருந்தது.

அவள் கணவருக்கோ எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை, நம்பிக்கையுமில்லை. ஆனால் ஏழு ஆண்டுகளாக தெரசா தன்



குழந்தையுடன் படும் வேதனையைப் பார்த்து அவள் மீது ஏற்பட்ட இரக்கவுணர்வு அவளுக்கு ஆறுதலாக நடக்கச் சொல்வதால் இந்தப் பயணத்தை ஏற்றார்.

அன்று சென்னையில் ஒரு ஹோட்டலில் தங்கினர். தெரசா தன் மகளைப் பரிவுடன் பல முறை பார்க்கிறாள். கனிவு ததும்பும் அன்னையின் முகம் அவளுக்கு நம்பிக்கையூட்டுகிறது. புகைப்படத்தில் பார்த்த அந்த அன்னையின் திருமுகம், அவர் அணிந்த பொன்னாடை, அதிலிருந்து வீசும் பொன்னொளி, அது தன் மகள் மீது ஒளிர்ந்து அவளுக்கு உணர்வூட்டும் என்ற நம்பிக்கை என்று இவ்வாறு அவள் அன்னையால் நிறைந்து உறங்கினாள்.

அன்றிரவு கனவில் ஸ்ரீ அன்னை அவள் முன் தோன்றி கனிவுடன் அவளைப் பார்க்கிறார். மிகுந்த மகிழ்வுடன் உடல் சிலிர்க்க, அவர் முன் மண்டியிட்டு அமர்கிறாள். “மதர், என் மகளைக் குணப்படுத்துங்கள். எனக்கு வேறு வழி தெரியவில்லை. எத்தனையோ மருத்துவர்கள் அவளைச் சோதித்து மருத்துவம் செய்து தோற்றுப்போனார்கள். இனி நீர்தாம் எங்கள் துணை'' என்கிறாள். சிரித்துக்கொண்டே அன்னை மேலே மேலே வளர்கிறார். அவர் மீது பொன்னிற அங்கி வந்து தானே தன்னை அணிவித்துக்கொள்கிறது. அந்த அங்கி கீழே தரை வரை வளர்ந்து வந்து தொங்குகிறது. உடனே தெரசாவுக்கு லூயி சொன்ன செய்தி நினைவுக்கு வருகிறது. அவர் அணிந்துள்ள பொன்னிற ஆடையைத் தீண்டியவர்கள் சோகம் நீங்கி சுகம் பெறுவார்கள் என்று லூயி சொல்லியிருக்கிறாளே. சரேலென எழுந்து தொட்டில் போன்ற ஒன்றில் கிடந்த அவள் குழந்தையை தூக்கி வந்து அவர் காலடியில் கிடத்துகிறாள். அவர் அணிந்திருந்த அங்கி காற்றில் அசைந்து பரவி அக்குழந்தையின் உடல் மீது பரவித் தொடுகிறது. அக்குழந்தையின் முகத்தை வருடுவதுபோல் தீண்டுகிறது. சிறிது சிறிதாக குழந்தை உணர்வு பெறுகிறாள். முகம் நிறைய புன்னகையுடன் அன்னையைப் பார்க்கிறாள். கை, கால்கள்

உணர்வுடன் அசைகின்றன. வாய்விட்டுச் சிரிக்கிறாள்.

'ஆகா! இது என்ன அற்புதம்! இப்படியும் நிகழுமா!' மெய்ம்மறந்து நின்றபோது அன்னை தம் பிரம்மாண்ட வடிவைச் சுருக்கிச் சாதாரண வடிவில் நிற்கிறார். குழந்தை மீண்டும் சலனமற்றுப்போனது.

''மதர், என்ன இது? என் குழந்தை சற்றுமுன் சிரித்தது பொய்யா? இது நடக்க முடியாதா?" என்று கண்ணீருடன் கேட்டாள்.

மதர் சிரித்துக்கொண்டே, ''முடியும். என்னிடம் தன்னைச் சரணாகதி செய்துகொண்டுள்ள என் அன்பன் இருப்பிடத்திற்கு உன் மகளைக் கொண்டு வா. நாளை நான் அங்குதான் இருப்பேன்" என்று கூறி, உடனே மறைந்துவிட்டார்.

கண் விழித்துப் பார்த்தால் நடந்தது கனவு என்று புரிகிறது. அந்தக் கனவை மறவாமல் அப்படியே நினைவில் பதித்துக் கொள்கிறாள். உடனே நாட்குறிப்புப் புத்தகத்தில் ஒன்றுவிடாமல் எழுதிக்கொள்கிறாள்.

இந்த இரவு நேரத்தில் தன் மனைவி ஏதோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவள் கணவர் பாதி உறக்கத்தில் எழுந்து, "தெரசா, என்ன செய்கிறாய்?" என்றார்.

உடனே அவள் ஆவலுடன் தன் கனவுக் காட்சியை விவரிக்கிறாள்.

அவர் கேலியாகச் சிரித்துக்கொண்டே, "உன் நினைவுதான் இந்தக் கனவு. நீ அதையே நினைத்துக் கொண்டிருப்பதால் இப்படிக் கனவு காண்கிறாய். இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடாதே" என்று கூறி உறங்கிவிட்டார்.

லூயி இப்பொழுது என்னுடன் இருந்திருந்தால் இது பற்றி அவளிடம் கூறியிருக்கலாம் என்று நினைக்கிறது தெரசாவின் உள்ளம்.

*தொடரும்....*

❀❀❀



(*'அன்னையின் தரிசனம்'* என்ற நூலிலிருந்து)

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

## 3. சுத்தம், வரிசைக்கிரமம்

வீட்டில் உள்ள எல்லாப் பொருள்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அவற்றை வரிசைக்கிரமமாக அடுக்கி வைத்துக்கொள்வதும் அவசியம். நாம் கையாள்கின்ற பொருள்களை அசுத்தமாகவும், தாறுமாறாகவும் வைத்திருந்தால், அவை அந்தப் பொருள்களைப் பெரிதும் பாதிக்கின்றன. அதன் காரணமாக அவை நமக்குப் போதிய பலனைத் தர விரும்புவதில்லை. அவற்றைத் தூய்மையாகவும், சீராகவும் வைத்துக்கொண்டால், அவை நமக்குப் பெரும் பலனைத் தருவதோடு, பன்மடங்காகப் பெருகவும் செய்கின்றன.

வீட்டில் தரை, ஜன்னல் கதவு, சுவர், சமையல் அறை, குளியல் அறை, வீட்டின் பின்புறம் போன்ற இடங்களில் அன்றாடம் தூசியும், அழுக்கும் சேர்ந்து விடுகின்றன. நாம் அவற்றில் கவனம் செலுத்தாமல், தரையை மட்டும் சுத்தப்படுத்தினால் போதாது. சுவர், ஜன்னல் கதவு போன்ற இடங்களில் அழுக்குச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த இடங்களில் கண்டபடி காகிதங்களை ஒட்டுவதும், கரித்துண்டாலும், பென்சிலாலும் எழுதுவதும் அல்லது கிறுக்குவதும் தவறாகும். கையில் ஒட்டிக்கொண்ட கரி, அழுக்கு, எண்ணெய் முதலியவற்றைப் போக்கச் சுவரையோ, கதவு, ஜன்னல் போன்றவற்றையோ உபயோகிக்கக்கூடாது. தண்ணீர் படுகின்ற இடங்களில் அழுக்கும்,

பாசியும் சேர்ந்துகொண்டு இருப்பது இயற்கை. அவற்றைத் தினமும் ஒரு தடவையோ அல்லது வாரத்துக்கு ஒரு முறையோ போக்கிச் சுத்தம் செய்ய வேண்டும்.

சமையல் அறையில் நிறையக் குப்பையும், கூளமும் சேர்ந்துகொண்டே இருக்கும். அவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். அங்கே எண்ணெய்ப் பொருள்கள் அதிக அளவில் உபயோகப்படுவதால், அது சுவரில் பூசப்பட்டு, அழுக்குச் சேர்வதற்கு வழி ஏற்பட்டுவிடுகின்றது. கையில் எண்ணெய்ப் பொருள்கள் ஒட்டிக்கொண்டால், பிசுக்கைப் போக்குவதற்குக் காகிதத்தையோ, கிழிந்த துணியையோ பயன்படுத்தலாம்; சோப்பையும் உபயோகிக்கலாம்.

வீட்டின் மூலைமுடுக்குகளிலும், கூரைப்பகுதிகளிலும் அழுக்குச் சேராதபடி கவனித்துக்கொள்ள வேண்டும். 'தேவை இல்லை' என ஒதுக்கப்பட்ட பொருள்கள், வீட்டைச் சுற்றிலும் அலங்கோலமாக இறைந்துகிடப்பதை அனுமதிக்கக்கூடாது. அவற்றை ஓர் இடத்தில் சேமித்து வைத்து, பிறகு தெருவில் உள்ள குப்பைத்தொட்டியில் சேர்ப்பித்துவிட வேண்டும். வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் அவசியம் இல்லாத செடி, கொடிகளை அகற்றிவிட்டு, நல்ல பூச்செடிகளையும், பயனுள்ள தாவர வகைகளையும் வளர்க்க வேண்டும். செடிகளிலிருந்தும், தாவரங்களிலிருந்தும் விழும் சருகுகளையும், சேரும் குப்பையையும் அவ்வப்போது நீக்கிக்கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து, வீட்டில் உபயோகப்படுத்தப்படும் பொருள்களைத் தூய்மையாகவும், பாத்திரங்களைக் கழுவித் துடைத்தும் வைத்துக்கொள்ள வேண்டும். உணவைத் தயாரித்து முடித்த பிறகோ அல்லது உணவை அருந்திய பிறகோ பாத்திரங்களைக் கழுவாமல் நீண்ட நேரம் வைத்திருக்கக்கூடாது. மின்விசிறி, டி.வி., ரேடியோ, சைக்கிள், தையல் இயந்திரம், மாவு ஆட்டும் இயந்திரம்



போன்றவற்றைத் துடைத்துத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். செய்தித்தாள்கள், நூல்கள், பத்திரிகைகள், பாடப்புத்தகங்கள் முதலியவற்றின் மீது தூசி படியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மேஜை, கட்டில், நாற்காலி போன்ற மரச்சாமான்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். உடுத்திய உடைகளைத் தினமும் துவைத்துவிட வேண்டும். அணியும் உடைகளில் அழுக்கோ, கறையோ பட்டுவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

வீட்டிலுள்ள பொருள்களைச் சுத்தமாக வைத்திருந்தால் மட்டும் போதாது. அவற்றை நன்றாக அடுக்கி, அவற்றுக்குரிய இடத்தில் மட்டுமே வைக்க வேண்டும். பாத்திரங்களைத் தாறுமாறாகப் பரப்பிக்கொள்ளாமல், தேவையானவற்றை மட்டுமே எடுத்தும், தேவை இல்லாதவற்றை அப்புறப் படுத்தியும் சமையல் அறையைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். துணிகளைக் கண்ட கண்ட இடங்களில் தொங்கவிடாமல், அவற்றை ஓரிடத்தில் மடித்துவைக்க வேண்டும். அந்த ஆடைகளை உடனுக்குடன் துவைத்துவிட வேண்டும். துவைப்பதற்குமுன் அவற்றை ஒரு கொடியிலோ அல்லது ஒரு வாளியிலோ போட்டுவைக்க வேண்டும். துணி கிழிந்துபோனால் உடனே அதைத் தைத்துவிட வேண்டும். செய்தித்தாள்களையும், நூல்களையும், பத்திரிகைகளையும் இங்குமங்குமாகப் போட்டு வைக்காமல் ஓர் இடத்தில் அடுக்கி வைக்க வேண்டும். புத்தகங்களில் கிறுக்குவது, எண்ணெய், மை போன்றவற்றைக் கொட்டி அசிங்கப்படுத்துவது தவறாகும்.

ஜப்பான் நாட்டில் உள்ள ஜென் (Zen) மதத்தைச் சேர்ந்த 'வின்சி' என்ற ஞானியின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இங்கு நினைவுகூரத் தக்கது.

ஒரு சமயம் வின்சியைச் சந்திப்பதற்காக ஒருவர் வந்தார். என்ன காரணத்தாலோ அவர் கோபத்தால் குமுறிக்கொண்டிருந்தார்.

வின்சியை அணுகுமுன் சாத்தப்பட்டிருக்கும் அறைக் கதவைத் திறந்துகொண்டு போக வேண்டும். வந்தவர் தம் காலணிகளைக் கழற்றி வீசி எறிந்துவிட்டு, கதவை உடைத்து நொறுக்குவதைப் போன்ற பேரொலியுடன் திறந்துகொண்டு வின்சியின் முன்னால் போய் நின்று வணங்கினார்.

அவருடைய செயல்களை ஏற்கனவே கவனித்திருந்த வின்சி, ''முதலில் உன் செருப்புகளிடத்தும், கதவினிடத்தும் நீ செய்த தவற்றுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும். நீ அப்படிச் செய்யத் தயாராக இல்லாவிட்டால் இந்த இடத்தை விட்டுப் போய்விடலாம். நீ என்னைச் சந்திப்பதில் எந்தவிதப் பயனும் இல்லை'' என்று கண்டிப்பாகக் கூறினார்.

வந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதனால் எழுந்த எரிச்சலுடன், ''அந்தப் பொருட்களிடம் மன்னிப்புக் கேட்பது பைத்தியக்காரத்தனம்'' என்றார். உன்னுடைய கோபத்தை அவற்றின்மீது காட்டுவது பைத்தியக்காரத்தனம் இல்லையா? அப்படி இருக்கும்போது அவற்றிடம் மன்னிப்புக் கேட்பது மட்டும் பைத்தியக்காரத்தனமாகிவிடுமா? அவை உன்னை மன்னிக்காத-வரை நான் உன்னை இங்கே அனுமதிக்க முடியாது'' என்றார் வின்சி.

அந்த அறிஞரின் சந்திப்பை அவரால் அலட்சியப்-படுத்திவிட்டுப் போக முடியவில்லை. அதே சமயத்தில் அவற்றிடம் மன்னிப்புக் கேட்கவும் அவருடைய பகுத்தறிவு இடம் தரவில்லை. அவருடைய மனத்துக்குள் ஒரு போராட்டம் நிகழ்ந்து முடிந்தது. 'வின்சியின் கூற்றில் ஏதோ ஓர் உண்மை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர், அவ்வாறு கூறி இருக்கமாட்டார்' என்று எண்ணிய அவர், மனத்தில் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு, கதவிடம் சென்று தம்மை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டார். முதலில் அது அர்த்தமற்ற செயலாகத் தோன்றினாலும், போகப்



போக அது மிகவும் உண்மையான ஒன்றாகத் தோன்றியது. அருகில் வின்சி இருந்ததோ, மற்றவர்கள் இருந்ததோ அவருக்கு முற்றும் மறந்துவிட்டது. கதவும், காலணிகளும் மட்டுமே அவர் கண்களுக்குத் தெரிந்தன. அவை அவர் செய்த தவற்றை மறந்துவிட்டு அவரிடம் அன்பு செலுத்தியதை உணர்ந்தார்.

எந்த நிமிடம் அவர் அப்படி உணர ஆரம்பித்தாரோ, அந்த நிமிடம் வின்சி அவரை அழைத்துத் தம்மிடத்தில் வர அனுமதி அளித்தார்.

பிற்காலத்தில் அவர் வின்சியைப் போல ஒரு ஞானியாக மாறினார்.

வாயற்ற பொருள்களுக்குச் செய்யப்படும் தவறுகளால் அருட்செல்வம் கிடைப்பதே தடைப்படுமானால், பொருட்செல்வம் கிடைப்பது மட்டும் எப்படித் தடைப்படாமல் இருக்கும்? அன்பர்கள் ஊன்றி உணர வேண்டும்.

ஸ்ரீ அரவிந்தாசிரமத்தில் இது போல நடந்த ஒரு நிகழ்ச்சி உண்டு. அங்கு இயங்கும் பல பிரிவுகளில் காகித ஆலையும் ஒன்று. அவ்வப்போது அன்னை ஆசிரமத்தைச் சார்ந்த அந்தப் பிரிவுகளை நேரில் சென்று பார்வையிடுவார். ஒரு தடவை அன்னை, காகித ஆலைக்குச் செல்ல முடிவு செய்திருந்தார். இதனை அறிந்த சாதகர்கள், 'வழக்கமாக இருப்பதைவிடத் தூய்மையாகவும், சீராகவும் இருக்க வேண்டும்' என நினைத்து, எல்லா இடங்களையும், எல்லாப் பொருட்களையும் சரி செய்துவிட்டு, அன்னையின் வருகையைப் பெருமிதத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அன்னையும் வருகை தந்தார்கள். உள்ளே நுழைந்ததும் ஒரு மர அலமாரியை நோக்கிச் சென்றார். அதன் கதவைத் திறந்தார். அதனுள் பல பொருள்கள் தாறுமாறாகத் திணிக்கப்பட்டிருந்தன. ''அவற்றை வெளியே எடுத்து, அவற்றிற்குரிய இடங்களில் சீராக

அடுக்கி வைக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றார் அன்னை.

இந்த நிகழ்ச்சி நிகழ்ந்த சில நாள்களுக்குப் பின்னர், “காகித ஆலைக்கு நீங்கள் சென்றிருந்தபோது அங்குள்ள மூடியிருந்த ஒரு மர அலமாரிக்குள் சில பொருட்கள் தாறுமாறாகத் திணிக்கப்பட்டிருந்தது உங்களுக்கு எப்படித் தெரியவந்தது?” என்று அன்னையிடம் கேட்டார் ஒரு சாதகர்.

''நான் அங்கே சென்றவுடனேயே, அந்தப் பொருள்கள் என்னிடம் முறையிட்டது என் காதில் விழுந்தது. ஆகையால்தான் நான் அந்த மர அலமாரியைத் திறந்து பார்க்க நேர்ந்தது” என்று அன்னை விளக்கினார்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலிருந்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டியவை இரண்டு. அவை, (1) எந்தப் பொருளையாவது நாம் அலட்சியப்படுத்தி அதற்குத் தர வேண்டிய கவனத்தைத் தரத் தவறிவிட்டால், அது நம் அலட்சியப் போக்கைக் கண்டு துன்புறுகிறது; (2) அப்பொருள் மீது திணிக்கப்பட்ட துன்பமானவை நம் வாழ்க்கையில் தடையாக மாறி, பல துன்பங்களை உண்டாக்குகிறது.

பொருள் நம்மை நாடி வர வேண்டுமானால், நாம் எந்தப் பொருளையும் பரிவோடும், முறையோடும் கையாள வேண்டும்.

*தொடரும்....*

❀❀❀

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பெண்ணின் பெருமை

ஆண்மையின் தெய்வாம்சத்தை - யோகத்தை - வாழ்வில் பூர்த்தி செய்ய வந்தவள் பெண். தாய்மை அவள் உடல் அம்சம். பெண்மை அவள் யோகாம்சம். ஆண் பெண்ணை தாய்மைக்காக நாடினால் *பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும்* என்ற ஆசீர்வாதம் கிடைக்கிறது. கருத்தில் பெண் காதலுக்குரியவள். காதலை முக்கியமாகக் கருதினால் பெண் மனைவிக்குரிய மனைவியாவாள். தாய்மை பின்னணிக்குப் போகும். குடும்பம் முன்னணிக்கு வரும். தானே அளவுக்குட்பட்டதாகும்.

காதலுக்குரியவளாக எப்படி அவளைக் கருதுவது? அவள் நோக்கில் வாழ்வைக் கருதினால் அவள் மனம் மலரும். **அவளை அவள் மனம் போக்குப்படி அறிய முயலும்பொழுது, நியாயமானவற்றை, அவள் கேட்காமல், பிறர் எடுத்துச் சொல்லாமல் தானே கணவன் செய்ய முன்வந்தால்,** அவன் காதலுக்குரிய கணவனாகிறான்.

- நல்லதை செய்தால் தவறு வாராது.
- நல்லதைப் பிறர் நோக்கில் செய்தால் பிறர் மனம் இனிக்கும்.
- திறமையும் நாணயமும் உள்ள பொறுமைசாலி நல்லதை மனைவி நோக்கில் தானே முன் வந்து இனிமையாகச் செய்தால், அக்குடும்பத்தில் காதல் மலரும், கருத்து சிறக்கும், குடும்பம் தானே அளவுக்குட்பட்டதாகும்.
- மனைவியில் இதுவரை வெளிப்படாத நல்ல குணம் வெளிப்பட்டு மணம் வீசும்.
- கணவன் அன்பரானால், கருத்து கற்பனையைப் பூர்த்தி செய்யும்.
- மனைவியும் அன்பரானால், வீடு குடும்பமாகும்; குடும்பம் ஊருக்கு மையமாகும்.
- விதி விலக்கு நூற்றுக்கு ஒன்று, ஆயிரத்தில் ஒன்றல்ல. விலக்கு உண்டு. அது பத்து லட்சத்தில் ஒன்று. குடும்பத்தை ஏற்பவருக்கு விலக்கு எழாது. யோகத்தை ஏற்பவருக்கு விலக்கு தவறாமல் எழும்.
- பெண் ஆணின் மனநிலையை உயர்த்தி சிறப்பாக்குவது போல், படிப்பு, பண்பு, பணம், பதவி நிறைவு தாராது.
- **பெண்ணில் நிறைவு கண்டவன், பெண்மையால் பெரும் பலன் பெறுபவன்.**
- பெண் மனம் நிறைந்தால், குழந்தைகளின் பண்பு நிறையும்.
- உலகுக்கு ஒரு சூரியன் போல் ஆணின் உள்ளத்திற்கு அன்பு நிறை பெண் உரியவள்.
- உடல் வாழ்விற்கு வீடு, பெரிய குடும்பம். உள்ளத்தின் வாழ்விற்குரியது குடும்பம், சிறியது.

***நான் அடுத்தவரில் பெருவாழ்வு வாழ வேண்டும்.***

❃❃❃

# ஸாப்ட்வேர் (Software)

மதம் மாறும் மனிதன் மனம் மாறுவதில்லை. உலகம் மாறினால் அவனும் மாறுவான். கம்ப்யூட்டர் வந்தபின் ஸாப்ட்வேர் வேண்டும். இதைப் பணம் போட்டு வாங்க வேண்டும். கம்ப்யூட்டரே வாங்க முடியாதவருக்கு ஸாப்ட்வேர் வாங்கப் பணமிருந்தாலும், பணம் போட்டு வாங்க மனம் வாராது. ஊரெல்லாம் திருட்டு ஸாப்ட்வேர் பரவலாக இனாமாகக் கிடைக்கும் பொழுது, பணம் போட்டு வாங்க மனம் வாராது.

***அந்தக் கட்டுப்பாடில்லாதவர் அன்னை அன்பராக முடியாது.***

அன்பர் சிரமப்பட்டு கம்ப்யூட்டர் வாங்கினார். திருட்டு ஸாப்ட்வேரைப் பயன்படுத்தினார். ஒரு நேரம் மனம் உறுத்தியது. கொஞ்ச நாள் அப்படியே ஓடிற்று. மனம் மாறி திருட்டு ஸாப்ட்வேர்களை கொடுத்துவிட்டு, வேறு வாங்க முடிவு செய்தபொழுது,

- மைக்ரோஸாப்ட் கம்பனி ஒரு திட்டத்தில் அவருக்குத் தேவைப்பட்ட ஸாப்ட்வேர்களை எல்லாம் தந்தது.
- மைக்ரோஸாப்ட் எக்ஸிபிஷனுக்குப் போனார் அன்பர்.
- அங்கு லாட்டரியில் அவருக்குப் பரிசு வந்தது.
- அந்தப் பரிசு அவருக்குத் தேவையான இசையாக அமைந்தது.
- தவறு ஆதாயமெனச் செய்யும் மனப்பான்மை விரும்பத்-தக்கதல்ல.
- தவறு செய்தால் வாழ்வில் தண்டனை கிடைக்கும்.
- தவறு செய்தால் அன்னையிடம் நெருங்கி வர முடியாது.

  செய்யும் தவறு வரும் பரிசைத் தடுக்கும்.

  பரிசைப் பெற தவற்றைத் தவிர்க்கலாம்.

  தவறு செய்யக்கூடாதென தவற்றைத் தவிர்ப்பது நல்லது.

தவறு செய்யும் மனப்பான்மைக்கு வாழ்வின் பரிசுகள் தென்படா. எதிரிலிருந்தாலும் விலகும்படி அமையும். **மனம் உயர்வாக இல்லாமல் அன்னையை அறிய முடியாது**. அறிந்தபின் தொடர்ந்து உயர, மனம் உயர்ந்தபடி இருக்க வேண்டும்.

***அன்பர் மனம் உயர்வது, அகிலம் அன்னையில் உயர்வதாகும்.***

***பெருவாழ்வு பிறர்க்குரியது. அதை நாடுவதே என் வாழ்வு.***

❃❃❃

Vol. I Issue 7 October 2011
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11


**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

| பாண்டியில் | சென்னையில் |
|---|---|
| மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,<br>5, புதுவை சிவம் தெரு,<br>வெங்கட்ட நகர் விரிவு,<br>புதுச்சேரி - 605 011.<br>✆ : (0413) 2212443, 2210514 | மாம்பலம் தியான மையம்,<br>23/1, மேற்கு சாலை,<br>மேற்கு C.I.T. நகர்,<br>சென்னை - 600 035.<br>✆ : (044)-24347191 |


Vol. I Issue 7 October 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## அக்டோபர் 2011